உ
சிவமயம்

விசேஷ
விளம்பரத்திற்கு!

இந்துசாதனம்

[illegible]
விளம்பரத்திற்கு!

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

Registered as a Newspaper in Ceylon.
P. M. G. No. H. A. 59/300/of 1939.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே.

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ம் திகதி ஆரம்பமானது.

புத்தகம் ௫௪] யாழ்ப்பாணம்:— விஷு ௵ தை ௴ ௧௩ ௳ (1942 ஜனவரி 26 திங்கட்கிழமை) [இலக்கம் ௭௮]

“சித்திரச் சொக்கர் திருமுகப் பாசுரம்”

(வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர்)

சைவ மணமும், தெய்வ ஒளியும் தழைக்கு நூல்கள் பன்னிருதிருமுறைகள். அவற்றுள் பல அன்பர் பாடல்களும் ஒருங்கு சேர்ந்து ஒளிர்வது பதினோராந் திருமுறை. அதனை ஒவ்வொன்றாக எடுத்து ஆராய்ச்சிக் கட்டுரைகளாக எழுதலாம், திருவருள் துணைசெயின் என்பது அடியேன் ஆர்வம். அவற்றுள் முதற்கண் மிளிர்வது முதல்வன் பாடல். அதனையெடுத்து இன்பம் நுகர்வேன். அடியேன் அறிவளவு இன்பம் எய்தக்கூடும்

“ஏழிசையாய் இசைப்பயனாய்” என்றருளினர் நிறை செல்வத் தியாகரது நெருங்கிய நட்பாளர். அவ்வாறு இசையாயிருப்பவர் இறைவர். இசைப்பயனும் உள்ளத்து இன்பத்தேன் ஊறச் செய்பவரும் அவரே. அவ்வாறு பொருளாயும்—பயனும் பொருந்திய பெருமானை இசை, வசப்படுத்திற்று. ஏன்? அவர் திருக்கரத்து வீணையேந்தி இசையின்பத்தை எய்துகின்றவர் மற்றொரு யாழாசிரியர்க்கு வசப்படுதல் வியக்கத் தக்கதோ? அதிலும் அன்பு கலந்த இசை. அவ்விசையை ஆக்கி வருபவர் இசைப்புலவர் பாணபத்திரர். அவருக்காக—அன்பிற்காக—இசைக்காக இறைவன் விறகும் சுமந்து அவர் பகைவனைச் சாதாரி பாடி வெருட்டினர். வேளாளர் மூலமாகவும், பாணர்வாய் மொழியாலும் உண்மையறிந்தான் பாண்டியமன்னன்; தன்வசமழிந்தான். பத்திரன் தெய்வத்தன்மை சித்தத்தைக் கொள்ளை கொண்டது.

தேவ ருந்தவ முனிவரும் தேவரிற் சிறந்தோர்
யாவ ருந்தமக் காட்செய விருப்பவர் இருந்தான்
கோவ லந்தமக் காட்செய்து நுங்குறை முடித்தார்,
ஆவ ரேனுமக் கவரும் ஏவரன்றே.
“ஆதலால் எனக்குடை யவர்நீர்
உமக்கு நானடியேன்”
என்று கூறுகிறான்.

“எல்லாரையும் ஏவல் கொள்ளும் இறைவர் தம் திருவடி நோவ வந்து உமது குறையையும் முடித்து உமக்கு ஆளாயினரே. ஆதலால் உலகமே உமக்கடிமை. ஆதலால் எனக்குத் தலைவர் நீர்” என்கின்றான். இதனால் அருளரசிற்குப் பொருளரசன் அடிமையானான். ‘இன்று தொட்டு நம் பாடற்றொண்டும் யாழ்த்தொண்டும் உலக இறைவருக்கு உரித்தாகுக’ என்று வேண்டிக்கொள்கிறான். அன்பரும் அவ்வாறே சொக்கலிங்கப்பெருமான்திருமுன் தம் தொண்டினைத் தவறாது இயற்றிவருகிறார். அரண்மனைத் தொண்டுபோய் அரன்மனைத் தொண்டாயினமையின் அன்பர்க்கு ஆவனசெய்யும்பொறுப்பு அரனுடையதாயிற்று. இறைவனும் இவர் காணப் பொற்காசுவைப்பர் சின்னாள். மணிவகைகள் வைப்பர் சின்னாள், சிம்மாசனத்தடு, சாமரைகாப்பு இவற்றைத் தருவர் சின்னாள். கொடுத்த கள்வரும் பெற்ற அறிவரும் அன்றிப் பிறரறியாதபடி பாணரும் அழிதலமாற நிதியும் ஆவனசெய்து இல்லறத்தை இனிது நடத்தி வந்தனர். இறைவனும் சின்னாள் கழித்துக் கொடுத்தலை நிறுத்திக் கொண்டனர். அன்பர் அடுத்ததைநிறுத்தாதாராய், வறுமையாற் பொறுமை மிகுந்து தொண்டாற்றி வந்தனர்.

இசைவாணர் வறுமையிற் செம்மையை பத்த இறைவனும் ‘நாம் பொருள்பெறு பாடல் தருகின்றோம். அதனைச் சேரனிடம்சேர்த்துச் செம்பொன் மிகப் பெறுக,’ என்றார். அப்போது இறைவனுடைய நான்மறை தந்த திருவாயால்—ஆகமம்அருளிய திருவாயால் தமிழ்ப்பாடல் ஒன்று வெளிவந்தது. பிறரைப் பாராட்டியறியாத தம்பிரான் வாயிலும் சேரன் சிறப்பும் ஆணையுமாகிய அருந்தமிழ்பிறந்தது.

அந்த அருளிப் பாடலில் முதற்கண் பாசுரம் அளிப்பவர் யார் என்பதும், பின்னர்க் காண்பார் யார் என்பதும், மூன்றாவதாக ஆற்றுப்படுத்தப்படும் அன்பர் இயல்பும், நான்காவதாகத் தனது ஆணையும் சொல்லப்படுகின்றன.

அளிப்பவர் யார்? இடமாகிய இலக்கணவரம்பு எய்தப்பெறாத இறைவன் தன்னைத் தன்மையில் வைத்துச் சாற்றுகிறார். சிவபெருமான் தந்த திருமுகப் பாசுரம் என்று, தன் தன்மையாக, “கூடற்பதியிற் கூடி விளங்குபவன் ஆலவாயில் மன்னிய சிவன்.” கூடற்பதியோ திங்கள் நிலவும் திருமதிலும் மாடங்களையும் உடையது. ஆலவாய் பால்நிற அன்னந்தங்கிய பொழில்களையுடையது. அங்ஙனம் இயற்கை வளமும் செயற்கை யழகும் செறிந்த மதுரைக்கு இறைவனாகிய சிவன் தந்தது என்று கூறிக்கொள்கின்றார்?

காண்பார் யார்? ‘புலவர் பெருமக்களுக்குப் பருவ மழையைப் போல அளவு கருதாது உரிமையோடு வழங்கும் வள்ளல் சேரன் காண்க. மற்றும் வெண்மதி போன்ற வெற்றிக்குடை பிடித்த வேந்தன் காண்க’ என்றருளிச் செய்கின்றார்.

ஆற்றுப்படுத்தப்படும் அன்பர் பாணபத்திரர் அவர் எம் திருமுன்பு அன்புப் பண்பால் யாழ்வாசிப்பவர் தம்மைக்காண வருகின்றார் ஆம் பாணனார்க்கும் பரமனார்க்கும் உள்ள தொடர்பு என்ன? என்னிடம் வரவிரும்புவதேன் என்ற இத்தகைய வினாக்களும் எழின் அதற்கு விடையாக “தாம் என்னிடம் எத்தனை அன்புடையவரோ? அத்தனையன்பு என்னிடம் அவர் கொண்டவர் எம்மிடம் உள்ள அன்பால் எம் அன்பராகிய உம்மையுங் காண விழைகின்றார். ஆட்டுவிப்போமாகிய நாம் சொல்ல அவர் வருகின்றார்.”

ஆணை:- ‘ஆதலால் பெரும்பொருள் கொடுக்க. இசைவிருப்பால் அன்பின் மிகுதியால் அவண் நெடிது தாழ்க்காது இவண் வரவிடுக’ என்பது இதன் பொருளாம்.

இப் பாசுரத்தின்கண் அருளரசர் பத்திரனார், அன்பும், இறைவனடித் தொண்டும் என்றவற்றையே பெறு பொருளாகக் கொண்டு சொக்கலிங்கப் பெருமான் திருமுன்பு தொண்டாற்றினர் என்பதும், இறைவன் திருமுன்பு பாண்டியன் பணியால் தொண்டுசெய்து வந்தும், பாண்டியன் தன்னிலை மறந்து இசையரசைக் காக்கவேண்டிய கடமையில் தவறியதால் இறைவனே பாண்டியன் பொன்னறையிற் புகுந்து “யானையுண்ட விளங்கனிபோலப் பூட்டியபடி பூட்டியபடியிருக்கவும் காவலர் விழிப்புடன் காக்கவும் உள்ளங்கவர் கள்வன் உள்ளத்தையுங் கவர் கள்வனாய்க் கவர்ந்தளித்துக் காத்தனர் என்பதும், இறைவன் கொடுப்பதை நிறுத்திய காலத்தும் பாணனார் மனம் தென்னவனைச் சிந்தியாமல் சிவனையே சிந்தித்தமையால் பெருமானுக்குப் புலவரைப் புரக்கவும், பொன்னறைகாப்பார்க்கு மன்னவனால் துன்பம் வாராமைப் பொருட்டும், பொருள் பொதி பாடல் அளிக்க நேர்ந்தது என்பதும், பாண்டியன் பக்கலிருப்பவும் சேரமானுக்கு ஓலை கொடுத்தது புலவர்களைக் காக்கப் பாண்டியன் மட்டுமேயன்றிச் சேரனும் இருக்கின்றான். அவன் தமிழ்த்தொண்டன் இசையன்பன் என்பதை விளக்கக் காண என்பதும், அச்சேரனும்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

அகவிலைக்குத் தீப்பெட்டி விற்பனை

எதிரிக்கு ரூபா 100 அபராதம்

கொழும்பு, ஜன 21— புறக்கோட்டை டாம் ஸ்ட்ரீட்டைச் சேர்ந்த ஒரு வியாபாரிமீது ஐந்து குரோஸ் தீப்பெட்டிகளை அகவிலைக்கு விற்றதாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டிருந்த வழக்கு, நேற்றுக் கொழும்பு நீதிபதி கோட்டில் விசாரணைக்குக் குறிப்பிடப்பட்டது.

விசாரணையின் இறுதியில் நீதிபதி எதிரிக்கு ரூபாய் 100 அபராதம் விதித்து, சிறிய கடையாகவிருப்பதால் அவ்விதம் அபராதம் விதிப்பதாகக் குறிப்பிட்டார்.

திருக்கோணமலையில் வேலை நிறுத்தம்

திருக்கோணமலை, ஜன 21— கடற்படை வேலைப்பகுதித் தொழிலாளர்கள் தங்களுக்கு வேண்டிய அரிசியைப் பெற முடியவில்லையெனக் கூறி வேலை நிறுத்தஞ் செய்துவிட்டனர். அவர்களது குறை என்னவெனில், நாளொன்றுக்கு ஒருகொத்து அரிசி தங்களுக்கும் தங்களது பிள்ளைமக்களுக்கும் போதாது என்பதேயாகும் எனத் தெரிகிறது.

பன்றியென நினைத்துச் சுடப்பட்டார்

காட்டில் நடந்த பரிதாப மரணம்

தங்காலை ஜன 21 மாத்தறைப் பகுதியைச் சேர்ந்த பி. என், ஜோன் என்பவர் கானகத்திலே கொடிகளைச் சேகரிக்கும்போது சுடப்பட்டு இறந்துபோனார். காலஞ்சென்றவர் தங்காலைப் பகுதியிலுள்ள ஒரு தோட்டத்தில் வேலைக்கு வந்தார். அருகிலுள்ள கானகத்தில் கொடி முதலியவற்றைப் பிடுங்கிக்கொண் டிருந்தார்.

அச்சமயம் அப்பகுதிக்கு வேட்டையாட வந்த ஒருபேர் வழி அவரைக் காட்டுப் பன்றியென நினைத்துத் துப்பாக்கியாற் சுட்டுவிட்டார். அது காரணமாக ஜோன் இறந்து போனார். சுடப்பட்ட ஜோன் அலறியதும், சுட்டவர் பிரமித்துப் போனார். துப்பாக்கிச் சப்தத்தைக் கேட்டுக் காலஞ்சென்ற ஜோனின் முதலாளியும் மற்றொருவரும் ஸ்தலத்துக்கு ஓடிவந்தனர்.

அப்பால் காயமடைந்தவர் கிராமத் தலைமைக் காரனால் தங்காலை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு ஜோன் இறந்து போனார். இது சம்பந்தமாக மரண விசாரணை நடைபெற்றது. அகஸ்மாத்தாக மரணமேற்பட்டதாகத் தீர்ப்பளிக்கப்பட்டது.

நெல்லுக்கு ஒரே விலை

வடமத்திய மாகாணத்திலிருந்து இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கு நெல் ஏற்றுமதி செய்வது இப்போது விலக்கப்பட் டிருக்கிறது. அதனால் அங்கே நெல்லின் விலை புசல் ஒன்று 2 ரூபா 50 சதத்திலிருந்து 2 ரூபா 30சதமாகக் குறைந்து போயிருக்கிறது. இன்னும் சில தினங்களில் மேலும் அதன் விலை குன்றுமோ வென்ற அச்சம் எழுந்திருக்கிறது. அதனால் அம்மாகாண அதிகாரிகள் அங்கே நெல்லுக்கு ஓர் நியதியான விலையைக் குறிக்கும்படியாக அரசாங்க விற்பனைப் பகுதிக்கு ஆலோசனை கூறியிருக்கிறார்கள்.

மாறுவேடம் பூண்ட எழுபேர்

வியாபாரி வீட்டினுள் நுழைந்தனர்

திரிகோணமலை ஜன 21— நேற்றிரவு ஏறக்குறைய ஏழுபேர் மாறுவேடம் பூண்டு, ஒரு பிரபல வியாபாரியின் வீட்டிற் புகுந்தனர். திறந்திருந்த ஒரு கதவின் வழியாக அவர்கள் உள்ளே நுழைந்தனர். அவர்கள் நுழைவதைப் பார்த்துவிட்ட ஒரு கிழவனைக் கொன்று விடுவதாகப் பயமுறுத்த, அக்கிழவன் சும்மா இருந்துவிட்டான். வீட்டிலுள்ள மற்றவர்கள் இதைப் பார்த்துக் கூக்குரலிட்டார்கள். அண்டையிலுள்ள சனங்கள் கூடித் திருடர்களைப்பிடித்தார்கள். மூவர் அகப்பட்டனர். நால்வர் ஓடிவிட்டனர். வீட்டுக்காரர் பொலீசைக் கூப்பிடப் போயிருக்குஞ் சமயத்தில் வேறு சிலர் வந்து பிடிபட்டவர்களை விடுவிக்க முயன்றனர். அந்தச் சமயத்தில் இந்தியத் துருப்புகளைச் சேர்ந்த இருவர் அங்கு வர, விடுவிக்கவந்தவர்கள் பயந்து ஓடிவிட்டனர். பிடிபட்டவர்கள் பொலீசாரிடம் ஒப்புவிக்கப்பட்டனர். பொலீசார் புலன் விசாரித்து வருகின்றனர்.

பழைய நீதவான் பொலீஸிற் சேருகிறார்

விசேஷ கொன்ஸ்டபிள்களின் கடமை

கொழும்பு ஜன 23 கொழும்பின் தென்பகுதியில் 80 விசேஷ கொன்ஸ்டபிள்கள் சேர்க்கப்பட் டிருக்கின்றனர். அவர்கள் பம்பலப்பிட்டிப் பொலீஸ் பயிற்சிப் பள்ளிக்கூடத்தில் பிரமாணஞ் செய்து சேர்த்துக் கொள்ளப்பட் டிருக்கின்றனர். இவ்விதம் கௌரவ கொன்ஸ்டபிள்களாய்ச் சேர்ந்தவர்களிற் பழைய நீதவான் ஒருவரும் பிரபல வியாபாரிகள் அநேகரும், அரசாங்க அதிகாரிகளும், அநேக முதலியார்களும் முகாந்திரங்களும் இருக்கின்றனர்.

அவர்கள் பிரமாணஞ் செய்வதற்கு முன்பாக அவர்களுடைய கடமைகளைப் பற்றியும், அவர்களுடைய அதிகாரங்களைப்பற்றியும் பொலீஸ் சுப்பிரிண்டெண்டன் விளக்கினார். வழக்கமாக வேலை பார்த்து வரும் பொலீசுக்கு உதவியாகக் காவல் காப்பதும் குற்றங்களைத் தடுப்பதும் முதலிய வேலைகளோடு வீட்டுக்குள்ளெரியும் விளக்குகளின் விஷயமாக விளக்கணைப்புத் திட்ட விதியை நடைமுறையில் நடத்துவதும் இந்தக் கொன்ஸ்டபிள்களின் வேலையாகும் என்று மிஸ்டர். பேக்கர் எடுத்துச் சொன்னார். அவசரச் சந்தர்ப்பங்கள் நேரிடும்போது பக்கத்திலுள்ள பொலீஸ் நிலையங்களிலாவது அவர்கள் தெரியப்படுத்த வேண்டும் என்று மிஸ்டர். பேக்கர் தெரிவித்தார்.

மோலடவ் லண்டனுக்கு வருகிறாரா?

லண்டன் ஜன 21 சோவியத் அயல்நாட்டு மந்திரியான மான்ஷீர் மோலடவ் மிகவிரைவில் லண்டனுக்குப் போகப் போகின்றாரென ஒரு ஸ்டாக்ஹோம் பத்திரிகையின் நிருபர் சொல்லியிருப்பதாக உரோமாபுரி ரேடியோ கூறுகின்றது. இதைப்பற்றி லண்டன் அதிகார வட்டாரங்களுக்குத் தகவலில்லையென்றும் குறித்த நிருபர் சொல்லாத விஷயங்களை அவர்கள் சொல்லியதாக உரோமாபுரி ரேடியோ கதை பரப்பி விருக்கிறதென்றும் ராய்ட்டரின் அரசியல் நிருபர் கூறுகிறார்.

இலங்கை றப்பர் ஏற்றுமதி

லண்டன், ஜன, 21— இங்கிலாந்து றப்பர்க் கொண்ட்ரோலர், றப்பர் வர்த்தகச் சங்கத்திற்குத் தெரிவிப்பதாவது:—

ஜனவரி மீ 19-ந் திகதிக்குப் பிறகு றப்பர் கொண்ட்ரோலருக்கு விற்ற றப்பருக்கு, இலங்கையிலிருந்து ஏற்றுமதிசெய்ய, துறைமுகத் தீர்வை அதிகரிக்கப்பட்டால், அது “சப்ளை” மந்திரியின் பகுதியாற் கொடுக்கப்படும்.

றப்பர் உற்பத்தியை ஆதரியுங்கள்

தேசாபிமானத்தைப் பொறுத்த கடமை

கொழும்பு, ஜன, 28— றப்பர் ஆராய்ச்சிப்பகுதி டைரக்டர் விடுத்துள்ள சுற்றறிக்கையொன்று கூறுவதாவது:—

தூரக்கிழக்கு யுத்தநிலைமைகாரணமாக நேசதேசங்களுக்கு ஒருபெரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. அஃதாவது இத்தேசங்களுக்குக் கிடைக்கக்கூடிய றப்பர் ‘சப்ளை’ மிகவும் பாதிக்கப் பட்டிருக்கிறது. இப்போது மலாய்நாட்டில் றப்பர் உற்பத்தித்தொழில் பெரும்பாலும் ஸ்தம்பித்துப் போயிருக்கிறது. டச்சுக்கிழக்கிந்தியத்தீவுகளுக்கும் பேராபத்து ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமையினால் றப்பர் ‘சப்ளை’ விஷயத்தில் நேசதேசங்களுக்கு ஏற்பட்டுள்ள குறையை இலங்கை அதிக தூரம் ஈடுசெய்ய முடியாது. ஏனெனில், இங்கு றப்பர் அவ்வளவு அதிகமாகப் பயிர் செய்யப்படவில்லை. ஆயினும், இத்தேசத்தில் றப்பர் உற்பத்தி செய்பவர்கள் தங்கள் சொத்துக்களுக்குப் பாதகமில்லாத முறையில் றப்பர் உற்பத்தியை உடனேதானே தீவிரமாக அதிகப்படுத்துவது தேசாபிமானத்தைப் பொறுத்த அவர்களுடைய கடமையாகவும் வியாபார முறையில் நல்ல பலனளிக்கத்தக்க நடவடிக்கையாகவும் இருக்கிறது. 1941 டிசம்பர் 28-ந் திகதி றப்பர்க் கொண்ட்ரோலர் விடுத்த அறிக்கை போன்று இதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறது.

உள்நாட்டுப் பாதுகாப்புக்கு ரூபா 5 கோடி

புதிய கடன் திரட்டுவதற்குச் சட்டம்

சென்ற புதன்கிழமைவெளியான விசேஷ கசெற்றில் உள்நாட்டுப் பாதுகாப்புக் கடன் சட்டம் என்னும் பெயரோடு ஒரு நகற்சட்டம் பிரசுரிக்கப் பட்டிருக்கிறது. அவசரச் செலவுகளுக்காக 5 கோடிரூபாய் கடன் திரட்டுவதற்காகவே இச்சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இந்தக்கடன் இலங்கையிலேயே திரட்டப்படும். அதற்காகப் போக்கிஷக் காரியாலயக் கடன் பத்திரங்களை வெளியிடுவதற்கான அதிகாரம் பெற்றுக்கொள்ளப்படும்.

இச்சட்டத்தில் அவசர காரியங்கள் என்று குறிப்பிட்டிருப்பது அரசசக்கரவர்த்தி நடத்தும் எந்த யுத்தம் சம்பந்தமாகவோ அதையொட்டிய அவசர நிலைமைகாரணமாகவோ செய்யவேண்டிய காரியங்கள் எனப் பொருள்படும்.

இக்கடன் மூலமாகக் கிடைக்கும் பணம்முழுவதும் அவசர காரியங்களுக்காகவேதான் செலவு செய்யப்படும். ஆனாலும், அச்செலவுகளுக்கும் அரசாங்கசபை அனுமதியளித்துத் தேசாதிபதி அங்கீகரித்தாக வேண்டும்.

நருமதை

(எம். நாராயணசாமி, பி. ஏ., எல். டி. கோவை)

இயற்கை அன்னையின் திருவிளையாடலை வர்ணிப்பது எளிதான காரியமன்று. அவள் கலைகளின் அழகே அழகு. பல்வகை வல்லமைகளின் உதவியால், மாவியப்பான வேலைப்பாடுகளுடன் தன் கலைகளை அவள் அழகு செய்கிறாள். கடலின் அடியிலாகட்டும், மலைகளின் உச்சியிலாகட்டும், ஆறுகளின் போக்கிலாகட்டும், நீர்வீழ்ச்சிகளிலாகட்டும், இயற்கை அன்னையின் வேலைத்திறம் ஒளிவிடுகின்றது. அதன் கனிந்த அழகில் ஈடுபடுவதைத் தவிர வேறு நம்மால் ஒன்றும் செய்ய முடிவதில்லை.

ஜபல்பூருக்கு அருகில் நருமதை யாற்றின் ஓரத்தில் பேடாகட்டம் என்ற ஓரிடம், சலவைக்குன்றுகளுக் கிடையில் உண்டு. அங்கே செல்பவர்கள், அங்கே தோன்றும் ஆற்றின் நீரோட்டத்தையும், நீர் வீழ்ச்சியையும், சுழல்களையும் கண்டு அவற்றின் அழகில் தம் மனதைப் பறிகொடுத்து விடுகிறார்கள்.

குழாங்கற்களிடை, சலசலப்புடன் ஓடும் ஆழமே இல்லாத நருமதை, இவ்விடத்தில், குறுகி, மிக்க ஆழமாகவும், விசையுடனும், வீறுடனும் குன்றுகளினிடையே பாய்ந்து செல்கிறது. பொதுவான கறுப்புப் பாறைகளாக இராமல் பளிங்குக் கற்களாக இருப்பதால், பாறைகளினிடை விழும் நீர், வெள்ளிக் கம்பிகளின் இழைகள்போல் ஒளிர்கிறது. கீழே சுழல், அதன் இரைச்சல், அங்கு எழும் நுரை, தெறித்து விழும் நீர்த்துளிகளில் சூரிய ஒளி பட்டுக் காணும் பலவகை வர்ண சித்திரங்கள் நம்மை அறவே திகைக்கச் செய்கின்றன.

இன்னும் சற்றுக் கீழே செல்லும்போது, ஆற்றின் விரைவும் ஓட்டமும் சலித்து அடங்கினதுபோல் மோனமாக மணல் தரையில் பாவி அமைதியாகச் செல்கிறது. எனவே, இந்தக் கட்டத்தில், நருமதை தன் முழு அழகுடன் விளங்குகிறாள்.

ஜபல்பூரிலிருந்து ஏறக்குறைய 170 மைல் கிழக்கே, இந்த ஆறு தோன்றுகிறது. பல காடுகளையும், குன்றுகளையும் கடந்து, இடையிடையே கலக்கும் சிற்றாறுகளுடன் கூடிப் பெரிதாகி, இந்தத்தரையை அடையும்போது, மிகுவிரைவாக ஓடிவருகின்றது. இங்கு ஓர் ஆறும் இதனுடன் கூடுகிறது.

ஆனதுபற்றி, மற்றக் கூடல் துறைகளைப்போல், இந்தக் கட்டத்தை இந்துக்கள் ஒரு புண்ணியப் பொருளாகக் கருதுகின்றனர்.

கூடல்துறைக்குக் கீழ்ப்பாகம், ஆழமில்லாமலும், அதன் மேல்பாகம் ஆபத்தானதாகவும் அமைந்துள்ளன. குன்றுகளிடை விழும் நீரின் காட்சி பார்வைக்கு இனிமையாக இருக்கிறது.

ஒரு பர்லாங்கு அளவிற்கு, குன்றுகளிடையே பாவி விழும் தண்ணீரின் இரைச்சல் மிகத் தொலைவு கேட்கும். இருபுறமும் ஓங்கி வளர்ந்து நிற்கும் பாறைகளினிடையே ஆறு கம்பீரமாக ஓடுகிறது. வெண்மை நிறமுடைய பாறைகளின் முகம் நீரில் எதிரொளி செய்து, நீரும் பாறையும் வேறின்றித் தழுவி இருப்பதுபோல் ஒன்றுபட்டுக் காண்கின்றது. அசைவற்ற குளத்திலுள்ள நீரைப்போல் அலைகளின்றித் தெளிவாக, நருமதை இங்கே தோன்றுகிறாள்.

சரித்திர விளக்கம்பெற்ற தாஜ் மஹாலை, முழு நிலவின் ஒளியில் நாம் பார்ப்பது சிறப்பு. பளிங்குக் கற்களினழகு நிலவின் ஒளியில் தனிச் சுடருடன் காணும்போல் தோற்றுகிறது. இங்கும், அம்புலியின் சாந்தமான ஒளிக்கற்றைகள், ஓடும் நீரின்மேற் பட்டு எதிரொளி செய்து, பளிங்குப் பாறைகளைப் பலவகை வர்ணங்களுடன் காணச் செய்வது, இயற்கைத் தேவியினுடைய சிறப்புகளின் உன்னத நிலையைமெய்ப்பிக்கின்றது. அங்குள்ள மோன நிலையையும் அழகையும் பருகி நுகர்ந்துதான் அறிய வேண்டும். தண்ணீரை அசைத்து அழகைப் பாழ்படுத்தக்கூட மனம் இடக்காது.

நீரோட்டத்தின் உன்னதக் கைத்திறம், பாறைகளை உடைப்பதிலும், செதுக்குவதிலும், பலவகை உருவங்கள் தோன்றுமாறு கூறுபடுத்தியிருப்பதிலும் காண்கிறோம். நமது மனப்போக்கின்படி, பலவகை உருவங்கள் கண்களுக்குமுன், நிலவொளியில் விளங்குகின்றன.

அங்குள்ளவர்கள் பாறைகளுக்குப்பல பெயர்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவற்றுள் இராணி துர்க்கா தேவியின் பெயர் முதன்மையானது. இவ்வம்மையார், அவள் பெயர்கொண்ட பாறையின்மீது அமர்ந்து இயற்கைத்தேவியின் அழகில் ஈடுபட்டு, அதைக் கண்டுகளிப்பதில் தன்னை மறந்திருந்தாள் என்றும், பிற்காலத்தில் இங்குள்ள தரையில் மூழ்கி, குன்றின் உச்சியின் கடவுளை வழிபடுவதில் ஈடுபட்டிருந்தாள் என்றும் வரலாறு கூறுகிறது.

இத்தகைய இடங்களில், நம் மனத்திற்கு ஓர் அமைதியும் பரிசுத்தமும் ஏற்படுவது இயல்பே.

புராண வாயிலாக, பிருகுமுனி இந்த இடத்தில் தவம் செய்ததாகவும், ஈசன் அவருக்குத் திருவுருக் காட்டி ஆசியளித்ததாகவும் அறிகிறோம்.

குன்றின்மீது சிவன் கோவில் ஒன்றுளது. அதன் கோபுரம் வட இந்தியக் கோயில்களில் காணப்படுவதுபோல் அமைந்துள்ளது. சுற்றுச்சுவர்களில் பல மூர்த்திகளின் உருவங்கள் தென்னாட்டுக் கோவில்களில் காணப்படும் திருவுருவங்களைப்போல் செதுக்கப்பட்டுள்ளன.

பல சிற்பிகள் இங்கே குடியிருக்கின்றனர். சிலைகள், கோவில்களின் உருவங்கள், விளையாட்டுச் சாமான்கள் பலவற்றைப் பளிங்குக் கல்லில் உருவாக்கி விற்பதில் இவர்கள் தங்கள் காலத்தைச் செலுத்துகின்றனர்.

பருவமழை மாதங்களில், ஆறு பெருகிக் குன்றுகளையும் வெள்ளத்தில் அமிழ்த்திவிடும். அப்போது இக் காட்சியை அனுபவிக்க முடியாது. புது அழகுடன் மீண்டும் இந்த இடம் நான்கு மாதங்களுக்குப் பிறகுதான் தோன்றும். ஆக்குவதும், அழிப்பதும் அவள் வல்லமையின் பணியன்றோ?

—செந்தமிழ்ச்செல்வி

போப் கொலை வழக்கு அப்பீல்

போப் கொலைவழக்கிற் குற்றவாளிகளாகக் காணப்பட்டிருக்கும் இருஎதிரிகளும் தமக்கு விதிக்கப்பட்ட தண்டனையை ஆக்ஷேபித்து அப்பீல்செய்ய அனுமதிகோரி மனுச் செய்திருக்கின்றனர். இந்த மனு அப்பீல் கோட்டில் நீதிபதி மிஸ்டர். மோசலி நீதிபதி மிஸ்டர். ஹேர்னே, நீதிபதி மிஸ்டர். விஜயவர்த்தனா ஆகியோர் முன்னிலையில் பெப்ரவரி மீ 2-ந் திகதி விசாரணை செய்யப்படும்.

புஸ்லாவை ஸ்டெல்லன் பர்க் தோட்டத் தொழிலாளிகளான ஆர். வீராசாமியும் ஐயம்பெருமாள் வேலாயுதனும் அந்தோட்டச் சுப்பிரிண்டெண்டான மிஸ்டர். ஸி. ஏ. ஜி. போப்பைக் கொலைசெய்த குற்றவாளிகளாகக் காணப்பட்டு நீதிபதி மிஸ்டர். சோர்ட்ஸால் மரணதண்டனை விதிக்கப்பட்டாரென்பதிங்குக் குறிப்பிடத் தக்கதாகும்.

வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமரனாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் விஷு வூ
தைமீ ௧௰௨ திங்கட்கிழமை

"அபாயம் ஒருநாளுமில்லை"

"சிவாயநம என்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒருநாளுமில்லை" என்பது பெரியார் வாக்கு; யுகபேதத்தினாலோ, கன்ம வசத்தினாலோ இக்காலத்திலே மக்களுட் பெரும்பாலார் தெய்வத்தை மறக்கத் தலைப்பட்டுக் கொண்டனர்; தெய்வத்தை மறக்கவே "எல்லாச் செயலும் இறைவன் இயற்றுவதே" என்ற அந்த உண்மையான நம்பிக்கை தேய்ந்துபோக, நான் எனது என்னும் அகங்கார மமகாரம் தடிக்க, இறைவன் அவனை மறக் கருணை கொண்டு ஆட்கொள்ளத் திருவுளம் புரிகின்றான். அந்த மறக் கருணையை இறைவன் ஆற்றத் தொடங்கும்போது இந்த மனுஷன் தனக்குத் தீராத்துன்பம் வந்துவிட்டதேயென்று உள்ளம் வருந்துகின்றான்; தன் அறியாமையினால், "கண் கெட்ட தெய்வம்" என்று சொல்லித் தெய்வத்தையும் திட்டத் தலைப்படுகின்றான்; எதுபோல்? தன்னுடம்பில் ஒரு இரணம் உண்டாகி ஒருவனை உபாதிக்க, அந்த இரணத்தைப் பரிகரித்து மாற்றும்படி வந்த சத்திர வைத்தியன் கருவி கொண்டு அவ்விரணத்தை வெட்டி அந்தஇரணமுற்றும் வெட்டுஞ் வேதனை பொறுக்க மாட்டாதவனாய்க் கத்திக் கொண்டு இரண வைத்தியனையும் வைவது போலவேயாம். தனது உபத்திரவத்தையொழித்துச் சுகத்தைத்தர வந்த பரிகாரியை, அப்பரிகாரி கருவி கிட்டாற்றும்போது இரணமுடையவன் அவனைத் திட்டுவது தவறாகுமென்பது எவருக்குந் தெரியும். அதுபோலவே அறியாமை மேற்கொண்ட மாந்தர் தமக்கு இன்னல் வந்த விடத்து இறைவனைக் குறை கூறுதலும் ஆகும். இது பற்றியே "நல்ல குருநாதர் நம்மை வருத்துவதும் கொல்ல வல்லக் கொல்ல வல்ல, பொல்லாக் குணம் போக்க" என்று பெரியோர் கூறுவர்.

நாட்டிலே பஞ்சம் வருவதும் பிணி பரவுவதும் பெருஞ்சமர் விளைவதும் இவைபோன்ற ஏனைய அனர்த்தங்கள் நேர்வதும் இறைவன் தன்னை மறந்த உயிர்களை மறக்கருணை புரிந்து திருத்தித் தன்னை வழிபட்டு ஈடேறச்செய்யும் உபாயமாகும் என்று எங்கள் சமய சாத்திரங்கள் கூறும் என்று எங்கள் பெரியோர் எடுத்துச் சொல்லியிருக்கின்றனர்; இப்படி மறக்கருணை புரியும் காலத்தாயினும் இறைவனுடைய திருவருட்டிறத்தை உணர்ந்து அவனைச் சிந்தித்து வணங்கித் துதிப்போமாயின் அவன் அம்மறக்கருணை செய்தலை விடுத்து எமக்கு அறக்கருணைவாயிலாக அருள்புரிவான். தெய்வத்தை மறத்தலும் அகங்காரமடைதலும் என்னால் எதனையுஞ் செய்தல் முடியுமென்பதும் பின்னர் இடுக்கு ஆளாவதும் தெய்வம் மறக்கருணை புரிந்து அந்த உயிரை ஈடேற்றுவதும் எந்தக் காலத்தும் உள்ள உண்மையாகும். தக்கனென்று ஒருவன் பூர்வகாலத்திலே தானே பிரமம் என மதித்துச் சிவனை மறந்து யாகாதி கருமங்களைச் செய்து தேவர்களையும் அந்த யாகாதி கருமங்களில் அவிப்பாகம் புசிக்கச்செய்து இறுமாந்து ஈற்றில் சிவஆஞ்ஞைப்படி வீரபத்திரக் கடவுளால் தண்டிக்கப்பட்டு ஆட்கொள்ளப்பட்டான் என்று கந்தபுராணம் கூறும். அத்தக்கனுடைய யாகத்தில் அவிப்பாகமுண்டவர்களாகிய தேவர்களிடத்திருந்த எஞ்சிய தீவினையைச் சூரபன்மனென்னும் அசுரன் வாயிலாக அத்தேவர்களை வருத்துவித்துப் பரம்பொருள் போக்கியருளினரெனவும், பின்னர் அச்சூரபதுமனுக்கு நேர்ந்த அகந்தையைச் சுப்பிரமணியக் கடவுள் மூலமாகப் போக்கி அவனுக்கு அருள் செய்வித்தாரெனவும் அந்தக் கந்தபுராணமே கூறுகின்றது.

இந்த மேற்கோள்களையெல்லாம் ஏன் எடுத்துக் காட்டுகின்றேமெனின், மறக்கருணை கொண்டு ஈசன் உயிர்களாகிய எங்களை ஆட்கொள்ளத் திருவுளம் புரியும்போதும் நாம் அந்தஈசனிடத்தில் இடையறாப் பத்தி வைத்து வணங்கித் துதிப்போமாயின் எங்கட்கு எவ்வகையான ஆபத்தும் நேரமாட்டா என்பது பற்றியேயாம். இந்த ஆபத்தான நேரத்தில "அவனையன்றி அணுவும் அசையாது" என்ற உண்மையை உள்ளத்தில் உறுதிக்கொண்டு அந்தப் பெருமானை நாம் அநுதினமும் மனமாரச் சிந்தித்து வாயாரவாழ்த்தி மெய்யார வணங்குதல் வேண்டும். இலங்குவெண்பிறைசூடி ஈசனடியார்க்குக் கலங்கு நெஞ்சமில்லை காண" என்பது ஆப்த வாக்கியம்.

பித்தளைச் சாமான் திருட்டு

எதிரிகளுக்கு அடித்தண்டனையும் மகோனுபோக உத்தரவும்

கரையூரில் வசிக்கும் சந்தியாப்பிள்ளை இராசநாயகமும் பண்டியந்தாழ்வில் வசிக்கும் சண்முகம்-தியாகராசாவும் சென்ற சில காலமாகத் தனித்தும் ஒருமித்தும் வெவ்வேறிடங்களிலுமுள்ள பலகிறீஸ்த கோவில்களிலும் பக்கத்தேயுள்ள வீடுகளிலும் சில்லறைப் பித்தளைச் சாமான்களைக் களவாடி அவற்றைச் சோனகதெருவுக்குக் கொண்டு சென்று விற்பனை செய்துவந்தனர். யாழ்ப்பாணம் பொலிசார் இவர்கள் இருவரும் ரோட்டாற் போனபோது, கையிலிருந்த சாமான்களைக்கண்டு ஐயுறவின்பேரிற் பிடித்து விசாரணை செய்தபோது உண்மைகளை இருவரிடமுமிருந்து அறிந்தனர். பின்னர், அவர்கள் சொல்லிய குறிப்பைக்கொண்டு, சொந்தக்காரரிடமும் விசாரணைசெய்தபோது உண்மையைக் கண்டனர். இவர்கள்மீது, ஆறுவழக்குகள் தொடரப்பட்டிருந்தன. இரு எதிரிகளும் குற்றங்களை ஒப்புக்கொண்டனர். இரண்டாமெதிரி முன்னர்க் களவு வழக்கில் இரண்டுமுறை தண்டனையநுபவித்தவன். இருவரும் 16 வயதுக்குட்பட்டவர்கள். எல்லா வழக்குகளுக்குமாக நீதிபதிமுதலாம் எதிரிக்கு எட்டு அடித் தண்டனையும் நாலு வருடம் மகோனவுக்குப் போகும்படியும் இரண்டாம் எதிரிக்குப் பத்து அடித்தண்டனையும் இரண்டு வருடம் மகோனவுக்குப் போகும்படியும் கூறினர்.

ச. கி.

சிறுமிக்குப் படுகாயம் உண்டாக்கியதாக வழக்கு

எதிரிக்கு 60 ரூபா அபராதமும் கோடுமுடியும் வரை மறியலும்

23—1—42

வட்டுக்கோட்டை மேற்கில் வசிக்கும் சின்னவன்-கார்த்தியன் என்பவன் அவ்வூர்க் குட்டியனின் மகள் பாக்கியமென்பவளுக்குங் காயப்படு உண்டாக்கியதாகக் குற்றஞ் சாட்டியவழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டான். நீதிபதி மிஸ்டர். குவின்டன் பெர்னாண்டோ எதிரிக்கு ரூபா 60 அபராதமும் கோடு முடியும்வரை மறியற்றண்டனையும் விதித்தார். அபராதப்பணம் கட்டப்பட்டால், ரூபா 25 காயக்காரச்சிறுமிக்கு நஷ்டப்பணமாகக் கொடுக்கப்பட வேண்டுமென்றும் கூறினர்.

ச. கி.

சட்ட விரோதமாகச் சாராயம் விற்றதாக வழக்கு

23—1—42

கரையூரில் வசிக்கும் ஆசைப்பிள்ளை-முத்தையா சட்ட விரோதமாகச் சாராயம் விற்றதாக யாழ்ப்பாணம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் மிஸ்டர். விஜயசேகரா ஒரு வழக்கை நீதிபதி மிஸ்டர். குவின்டன் பெர்னாண்டோ முன்னிலையிற் றொடர்ந்தார். அப்போது பொலிஸ் இன்ஸ்பெக்டர் சாக்ஷியங் கூறும்போது குறிப்பிட்டதாவது:-

சென்ற 20-1-42-ந் திகதி இரவு 9 மணிவரையில் நானும் 1583-ம் இலக்கப் பொலிஸ்காரன் உதுமாலெப்பையும் 2297-ம் இலக்கப் பொலிஸ்காரன் சில்வாவுமாக "றெக்ளமேசன்" ரோட்டுக்குச் சென்றோம். அப்போது இரு பொலிஸ்காரரும் சாதாரணமானவர்கள் போல் வெள்ளையுடைகளை அணிந்திருந்தனர். இவர்கள் இருவரிடமும் அடையாளம் இடப்பட்ட ஒரு ஐந்துருபாய் நோட்டையும் கொடுத்துக் கரையூர்த்தவறணையில் சாராயம் வாங்கும்படி அனுப்பினேன். இவர்கள் சென்றதும், நான் தூரத்தில் நின்றேன். பொலிஸ்காரர்கள் சென்று தவறணைக்கதவில் தட்டினர். அப்போது இவ்வெதிரி வளவுக்குளிருந்து வந்தார். சிறிது நேரம் இவர்கள் எதிரியோடு கதைத்தனர். பின்னர், எல்லோரும் உள்ளுக்குச்சென்றனர். எதிரி தவறணைக்குரிய கட்டிடஅறைக்குப் பக்கத்தேயுள்ள அறையொன்றை வாடகைக்குஎடுத்து அதில் வசித்து வந்தார்; நான், அங்கு சென்றபோது பொலிஸ்காரரில் ஒருவன் சாராயம் நிறைந்த ஒருபோத்தலைக் கையில் வைத்திருந்தான். நான் அவ்விடத்தைச் சோதனை செய்தபோது வேறொரு போத்தலில் சிறிது சாராயமுங் காணப்பட்டது. அல்லாமலும் 17 வெறும் போத்தல்களும் காணப்பட்டன. எதிரி 2 ரூபா 10 சதம் பெறுமதியான ஒரு சாராயப்போத்தலுக்கு 2 ரூபா 75 சதம் கேட்டார். நான் எதிரியைச் சோதித்தபோது எதிரி வசமிருந்து நான் கொடுத்தனுப்பிய ஐந்துருபாய் நோட்டையுங் கண்டெடுத்தேன்.

எதிரிமீது குற்றஞ் சாட்டப்பட்டபோது எதிரி தாம் குற்றவாளியல்லவெனக் கூறினர். நீதிபதி எதிரியை 200 ரூபாப் பிணையில்விட்டு மேல்விசாரணையை வருகிற 11 2-42 ந் திகதிக்குத் தவணையிட்டார்.

ச. கி.

புதுப் பெண்ணுக்குத் திருடிய சேலை உபகாரமா?

வேலைக்காரன்மீது வழக்கு

24-1-42

சிதாசியில் வசிக்கும் டாக்குத்தர் மிஸ்டர். G. S. மேதர் வீட்டில் ரூபா 125 பெறுமதியான ஒரு கைக்கடிகாரத்தையும் பட்டுச் சேலையையும் களவாக எடுத்துச் சென்றதாக முன்னர் அவர் வீட்டில் வேலைக்கு நின்ற கந்தையா - முருகேசுமீது குற்றஞ்சாட்டி ஒரு வழக்கை யாழ்ப்பாணம் பொலிசார் நீதிபதி மிஸ்டர் குவின்டன் பெர்னாண்டோ முன்னிலையிற் றொடர்ந்தனர்.

வழக்கின் சாராமாவது:-

எதிரியாகிய கந்தையா - முருகேசு டாக்குத்தர் மிஸ்டர். G. S மேதர் வீட்டில் இம்மாசத்துக்கு முன்னர் வேலைக்கு நின்றிருந்தான். அக்காலத்தில், அவன் தமக்கு விவாகம் ஒழுங்காக இருப்பதாகவும் அதன்பொருட்டுத் தமக்கு முன் தாசம் சிலவு தரும்படியும், எசமானிடம் கேட்டிருந்தான். அவன் சென்ற டிசம்பர் மாதத்தில் மூன்று நாள் லீவு கேட்டுச் சென்றவன் திரும்பி மிஸ்டர். மேதர் வீட்டுக்கு வரவில்லை. சென்ற 17-1-42ம் திகதி டாக்குத்தருடைய வீட்டு அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த ஒரு பட்டுச் சேலையும் கைக்கடிகாரமும் காணாமற் போனதை அவதானித்ததும், அவர் பொலிசாருக்கு எதிரிமீது ஐயுறவுகொள்வதாக ஒரு முறைப்பாட்டைக் கொடுத்திருந்தார். இம்முறைப்பாட்டை விசாரணை செய்வதற்கு உதவி இன்ஸ்பெக்டர் மிஸ்டர். இராமநாதன் சென்று விசாரணை செய்தபோது எதிரியினுடைய வாய்முறைப்பாட்டைக் கொண்டு இரத்தினசிங்கத்தையும் ஜெயரத்தின மென்பவளையும் விசாரித்து மணிக்கூட்டையும் வண்டிக்குளியிலுள்ள கந்தையாவை விசாரித்துச் சேலையையும் முறைப்படி பெற்றதாகவும் கூறப்பட்டது. மேலும் அச்சேலையை வேலைக்காரன் தமக்கு விவாகம் பேசி வைத்திருக்கும் பெண்ணுக்கு உபகாரமாகக் கொடுக்கும்படி கந்தையாவிடம் அதனைக் கொடுத்ததாகவுங் கூறப்பட்டது.

எதிரிமீது குற்றஞ் சாட்டப்பட்டபோது எதிரி தாம் குற்றவாளியெனக் கூறினான். நீதிபதி எதிரியைக் கைவிரலடையாளம் கொடுக்கும்படி கூறித் தீர்ப்புக் கூறுவதை வருகிற 31-1-42ந் திகதிக்குத் தவணையிட்டார். எதிரியை 200 ரூபாப் பிணையிற்றரவு போக அளிக்கப்பட்டிருக்கிறது.

ச-கி

4-ம் வட்டார வாக்காளர்கள் பொதுக் கூட்டம்

சமயோசிதம்போல் நடந்துகொள்ளப் பிரதிநிதி சுதந்திரம் கேட்கிறார்

பட்டினசபைத் தலைவர்மீது கண்டனம்

இம்மாதம் 21-ந் திகதி நாலாவது வட்டாரத்துள்ள பார்வதிவித்தியாசாலை மண்டபத்தில் திரு. க. பொன்னம்பலம் அவர்களின் தலைமையின்கீழ் மேற்படி வட்டாரவாக்காளர்களின் பொதுக்கூட்ட மொன்று நடைபெற்றது. அச்சமயம், தலைவர் பேசியது வருமாறு:-

யாழ்ப்பாண மத்திய வரியிறுப்போர் சங்கம் பட்டினசபையோடு சம அந்தஸ்துடையதாகப் பட்டின பரிபாலன விஷயங்களில் தலையிடத் தொடங்கிக் கொண்டது. இதற்கு அத்தாஷியாகச் சென்ற திங்கட்கிழமை நடந்த வரியிறுப்போர் சங்க நிர்வாகசபைக் கூட்டத்தில் ஸ்ரீமான் சிவகுருநாதர், வழக்கம்போல சமுகமளித்து, சென்ற ஒருவருடகாலமாகத் தாம் தலைவராகக் கடனாற்றிய விபரத்தைக்கூறி, அவசர உதவிமாகாண தலைவர் எழுதியிருந்த நிருபத்தையும் வாசித்துக் காண்பித்து, அதன்பின் நகரசபைத் தொழிலாளர் சார்பாக ஸ்ரீமான் எதிர்வீரசிங்கம் எழுதியுள்ள கடிதத்தையும் படித்துக் காட்டினர். இக்கடிதங்கள் பட்டினசபைத் தலைவருக்குப் பட்டினசபையின் சார்பாக அனுப்பப்பட்டவைகளே யன்றி, இவரது சொந்தச் சார்பாகவோ, அல்லது வரியிறுப்போர் சங்கத்தின் சார்பாகவோ, அனுப்பப்பட்டவைகளல்ல இதற்கப்பால் யாழ்ப்பாண நகரசபை 16ந் திகதிக் கூட்டத்தில் நிறைவேற்றிய நம்பிக்கையில்லாத் தீர்மானம் பிழை என்றும் நகரசபை எல்லைக்குள் வசிக்கும் வாக்காளர்கள் அனைவருடைய நம்பிக்கைக்கும் தலைவர் சிவகுருநாதர் உகந்தவரென்பதாகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தவிரவும் சென்ற நகரசபைக் கூட்டத்திற்கு நான் செல்லவில்லை. ஏனெனில், அதற்கு முந்திய கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் பின் எந்தச் சுயமரியாதையுடையவரும் தலைவர் பதவியை வகிக்க ஒத்துக்கொள்ளமாட்டார். நகரசபையின் நன்மைக்காக அத்தீர்மானத்தைக் கொண்டு வந்தேன். நகரசபையின் செலவினங்கள் செவ்வையாகக் கண்காணிக்கப் படுவதில்லை. நகரசபைச் சிப்பந்திகள் கட்டுப்பாட்டுடன் நடத்தப்படுவதில்லை. சில கேள்விகளுக்கு மறுமொழி சொல்லும்போது ஸ்ரீமான். சிவகுருநாதர் அவர்கள் தமக்குப் பிடித்தமான எவருடனும் கலந்து ஆலோசித்துக் காரியங்களைச் செய்யத் தனக்கு உரிமையுண்டென்று கூறினார். திருவாளர் ச. நடராசா வரியிறுப்போர் சங்கக் காரியதரிசி என்ற தன்மையில் எப்பொழுதும் நகரசபைக் காரியாலயத்தில் காணப்படுவதையும் தலைவருடைய அறையில் அடிக்கடி கலந்தாலோசிப்பதையும் கேள்வி கேட்கப்பட்டபொழுது தலைவர் இவ்விதம் மறுமொழியளித்த கூறினர்.

மேலும் நகரசபைக் கூட்டத்திற்கு விஷயசூசிகை தயார் செய்யப்பட்டதும் திருவாளர். ச. நடராசா சூசிகையை நன்றாய் ஆராய்ந்து விட்டு வரியிறுப்போர் சங்கப் பிரதிநிதிகளாக விருக்கும் அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் இன்ன இன்ன விஷயங்களில் எவ்வெவ்விதமாக மேற்படி அங்கத்தினர் வாக்குகளைப் பதிவு செய்யவேண்டுமென்று நிர்ணயித்து அவர்களுக்கு கட்டளையிடுகிறார். அக்கட்டளைகள் மேற்படி அங்கத்தவர்களால் நிறைவேற்றப்படுகின்றன. இவ்விஷயத்தில் வரியிறுப்போர்சங்க நிர்வாகிகளில் வேறுசிலரும் திருவாளர் நடராசாவுடன் சேர்ந்து கொள்கிறார்கள். இதுவே தற்கால நகரசபையின் முறையாகும். இம்முறையின்கீழ் உங்கள் பிரதிநிதியாகக் கடமை பார்ப்பது மிகவும் கடினமையாகும். எந்நேரத்தில் என் பதவியிலிருந்து விலகநேரிடுமென்பதை என்னால் சொல்லிக்கொள்ள முடியாது. உங்களுக்கு என்னில் போதிய நம்பிக்கை யிருக்குமானால் அம்மாதிரியான நிலை ஏற்படுங்காலை சமயோசிதம்போல் நடந்துகொள்ள எனக்குப் போதிய சுதந்திரமளிப்பீர்களென்று எதிர்பார்க்கிறேன்."

இவ்வாறு தலைவர் கூறியதும் சபையில் சில வாக்குவாதம் நடந்தன; அதன்பின் ஸ்ரீமான் பொன்னம்பலம் தான உசிதமெனக் கருதுகிறதற்கேற்ப நகரசபை விஷயங்களில் நடந்துகொள்ளலாமென்று ஏகமனதாகக் கூறப்பட்டது. ச. கி.

மலாயாவுக்கு 'மணியார்டர்' இல்லை

தபாற் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு விபரம்

மலாயாவைச் சேர்ந்த நெகிரி சேம்பிலான், கெட்டா, பிரவிஸ், கெலந்தான், டிரெங்கானு, வடக்கு பாஹாங், சின்டிங், செலாங்கூர், வடக்குப்பேராக், வெல்லஸ்லி மாகாணம், பினாங்கு, மரியாமி தீவுகளைச்சேர்ந்த குவாம் ஆகிய இடங்களுக்குச் சகல விதமான தபாற் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டு விட்டது.

ரிஜிஸ்டர் செய்யப்படாத சாதாரண கடிதங்களைத்தவிர மற்றெல்லா விதமான தபாற் போக்குவரத்தும் கீழ்க்காணும் இடங்களுக்கு நிறுத்தப்பட்டிருக்கின்றது. நெதர்லந்து இந்தியத்தீவுகள், டிமோர், வட போர்னியோ, புருனி, பிலிப்பைன் தீவுகள், சரவாக், மலாயாவிலுள்ள ஜோஹுர் சமஸ்தானம் காரு (மார்ஷல் தீவுகள்).

மலாய் நாட்டிலுள்ள எல்லாச் சமஸ்தானங்களுக்கும் தொவோய்ப் பகுதியிற் சிங்கப்பூரைத்தவிர, மற்றெல்லா இடங்களுக்கும் மணியார்டர் சேவை நிறுத்தப்பட்டிருக்கின்றது.

வியாபாரிகளின் கட்டுப்பாடு

கம்பளைப் பட்டினத்திலுள்ள வியாபாரிகள் சென்ற சனிக்கிழமை ஒரு கூட்டம் கூடி, அதிலே வியாபாரிகள் சங்கமொன்றை ஆக்கியிருக்கிறார்கள். இச்சங்கத்திற் சேர்ந்து கொள்ளும் வியாபாரிகள் எந்தச் சாமான்களையும் அரசினர் கட்டுப்படுத்திய விலைக்குமேல் கூட்டி விற்பதில்லையென்று தம்முள் ஒரு கட்டுப்பாடு செய்து எழுத்துமூலம் வாக்களிக்க வேண்டுமென அக்கூட்டத்திலே தீர்மானமாயிருக்கிறது. இன்னும் சனங்கள் அரசினர் கட்டுப்படுத்திய விலைக்கே தங்களுக்குத் தேவையான சாமான்களை வாங்க வேண்டுமென்றும், எவ்வளவு சிறிய சாமான்களாக இருந்தபோதிலும் அவற்றிற்குப் பற்றுச் சீட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றும் தெரிவித்துப் பொதுசனங்கள் மத்தியிலே துண்டுப் பிரசுரங்களைப் பரப்புவதென்றும், விலை கூட்டி விற்கும் வியாபாரிகள் மீது வழக்குத் தொடரும் விஷயமாகப் பொலிசாருக்கு உதவி செய்வதென்றும் அக்கூட்டத்திலே தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இணுவில் கந்தசுவாமி கோயில் மஞ்ச உற்சவம்

நிகழும் விஷு வருஷம் தைமாதம் 18 உ சனிக்கிழமை(31-1- 42) தைப்பூசத் தினத்தன்று மேற்படி கோயிலில் ஸ்ரீஷண்முகப் பெருமான் மஞ்சத்தில் எழுந்தருளி வீதிவலம் வருவார்.

விவாகம்

நிகழும் தை மாதம் 15 உ 28- 1- 42 புதன்கிழமை பகல் 2 மணிக்கு மேல் நிகழும் சுபமுகூர்த்தத்தில் திருநெல்வேலிஜில்லா, சூரங்குடி வக்கீல் (நியாயவாதி) திரு C. ஆறுமுகம் பிள்ளையவர்களின் புதல்வர் திரு. ஆ. இராமசாமிப் பிள்ளைக்கும், வண்ணார்பண்ணை திரு. ச. முத்துக்குமாரசாமிச் செட்டியார் புதல்வி திருவளர் செல்வி உண்ணாமுலையம்மைக்கும் வண்ணார்பண்ணைச் சிவன் கோவிலுக் கணித்தாகவுள்ள மணமகன் இல்லத்தில் விவாகம் நடைபெறுமென அறியலானோம்.

தந்திச் சமாசாரம்

மலாய்நாட்டுயுத்தம் பிரதானமானது

23-1-42

"மலாய்நாட்டில் நடக்கும் யுத்தம் தீர்க்கமானதாக இருத்தல் வேண்டும்; அவுஸ்திரேலியாவின் க்ஷேமம் அந்த யுத்தத்திலேயே தங்கியிருக்கின்றது; அவுஸ்திரேலியர் மலாய் நாட்டு யுத்தத்தின் பொருட்டுச் சைநியங்களையும், ஆகாயப்படையையும், கப்பல்களையும் உதவியுள்ளனர்; ஆனதால் எங்கள் நாட்டைப் பாதுகாக்கும் பொறுப்பு பசிபிக் சமுத்திரத்திலுள்ள குடியேற்றநாடுகளைப் பரிபாலித்து வரும் அரசினரிடத்திலேயே தங்கியிருக்கிறது" என்று மிஸ்டர் J. பெஸிலியென்னும் மந்திரி கூறுகின்றார்.

யப்பானியர்

யப்பானியர் இப்பொழுது எழு யுத்தமுனைகளில் நின்று சமர் புரிகின்றார்களாம்.

இரங்கூனில் ஆகாயப்படை யுத்தம்

பகைவருக்குரிய 21 விமானங்கள் நாசம்

யப்பானியருக்குரிய 70 விமானங்கள் இரங்கூனிற் குண்டு பெய்யும்படிவந்தவிடத்தில் பிருத்தானிய ஆகாயப்படை அவ்விமானங்களில் 21 விமானங்களைச் சிதைத்தனவாம். பிருத்தானிய ஆகாயவிமானம் இரண்டு தவறிவிட்டன.

ஹூஸனில் யப்பானிய படை

ஹூஸன் என்னுமிடத்தில் யப்பானியருக்குரிய இரண்டு லட்சம் படை நிற்கின்றதாம்.

சிங்கப்பூரை முற்றுகையிட முயல்கின்றாரா?

சிங்கப்பூரில் சில நிலையில பிருத்தானிய படை கௌரவமாகப் பின்வாங்க யோசிக்கின்றதென்றும் யப்பானியர் சிங்கப்பூரை முற்றுகையிட முயற்சி செய்கின்றனரென்றும், இப்பொழுது யப்பானியர் சிங்கப்பூருக்கு 75 மைல் தூரத்தில் நிற்கின்றனரென்றும் சிங்கப்பூர் மூலமாகச் சமாசாரம் கிடைக்கின்றதாம்.

நூற்குறிப்பு

சித்திரபானு வருட வாக்கிய பஞ்சாங்கம்

அடுத்த சித்திரபானு வருடத்திற்குரிய வாக்கிய பஞ்சாங்கம் யாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரமஸ்ரீ ச. சுப்பிரமணிய சாஸ்திரிகளால் வழக்கம்போல் நுட்பமாகக் கணித்து மேற்படி கணிதரின் சகோதரர் பிரமஸ்ரீ. ச. சோமஸ்கந்த ஐயரவர்களால் தங்கள் கலாநிதி யந்திரசாலையில் நன்கு அச்சிடப்பெற்று வெளிவரலாயிற்று; வழக்கமாகக் கார்த்திகை மாசத்தில் வெளிவரும் பஞ்சாங்கம் இவ்வருடத்தில் மாத்திரம் இரு மாசம் பிந்தித் தைமாசத்தில் வெளிவந்த காரணம் இப்பொழுதுள்ள காகிதப்பஞ்சத்தை யொட்டியதாகுமென மேற்படி சோமஸ்கந்த ஐயரவர்கள் தெரிவித்துள்ளார். மேலும் காகிதப் பஞ்சத்தைப் பொருட்படுத்தாது பிரதியொன்றன் விலை வழக்கம்போல் 25 சதம் (4 அணா) ஆகவே குறிக்கப்பட்டிருக்கிறது. இலங்கையிலுள்ள பிரதான கடைகளிற் பிரதிகள் பெறற்பாலன. தொகையாகப் பெறக்கருதுவோர் பஞ்சாங்க அதிகாரிகளிடம் பெறக் கொள்ளலாம்.

பாடவிதானம்

பிரதம வகுப்புகளுக்குரிய விரிவான பாடவிதானமாகிய இப்புதிய நூல், தமிழ்ப் பாலர்நிலைப் பிரிவு தொடக்கம் ஐந்தாம் வகுப்பு முடிய உபாத்தியாயர்கள் அவதானித்து எழுதவேண்டிய பாடவிதானங்களின்முறையை நன்குவிளக்குவதாகும். இந்நூலின் ஆசிரியராகிய திரு. J. V. செல்லப்பா அவர்கள், தாம் இந்நூலை எழுதியதற்குக் காரணம் இன்னதென்பதை அதன்முகத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:-

"வித்தியாபகுதியாரால் ஆங்கிலத்தில் அச்சிடப்பட்ட புதிய பாடத்திட்டம் இன்னும் தமிழில் வெளிவராமையினால் தமிழாசிரியர் பெரிதும் இடர்ப்படுகின்றனர்; ஆங்கில அறிவு பெற்றுள்ள தமிழாசிரியர் தாம் ஒருவருடத்திற் பயிற்றவேண்டிய பாடங்கள் இவ்வளவென்பதை ஆங்கிலப் பாடத் திட்டத்திலிருந்து அறிந்து கொள்ளக் கூடியவராயிருந்தும் அப்பாடங்களை விரித்து எழுதுவதிற் கஷ்டமடைகின்றனர். ஆதலினால் பல ஆசிரியரின் வேண்டுகோட்படி வித்தியாபகுதிப் பாடத்திட்டத்திற் கமைய இப்பாடவிதானம் எழுதப்பட்டது."

இப்புத்தகம் உபாத்தியாயர்கட்குப் பெரிதும் பயன்படுமென நினைக்கின்றோம். இது அமெரிக்கன்மிஷன் தமிழ்ப்பாடசாலைகளின் பொது முகாமைக்காரர் அவர்களின் மேற்பார்வையில் ஆக்கியதெனக் குறிக்கப்பட்டுள்ளது. (கிறவுன்) 8 பக்கப் பிரமாணங் கொண்ட 186 பக்கங்கள் வரையிற் கொண்டது. பிரதியொன்றன் விலை ரூபா 2. கிடைக்குமிடம் (1) R. C. செல்லையா தலைமையாசிரியர், அமெரிக்கன்மிஷன் பாடசாலை, மானிப்பாய். (2) தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம்.

குடி இயல்

இது தமிழ் ஜே. எஸ். ஸி. வகுப்பிற் பயிலும் மாணாக்கர்களுக்குப் பயன்படும்படி, பள்ளிக்கூட மாணவர்க்குரிய கணிதப்புத்தகங்கள் முதலான பல புத்தகங்களை எழுதி வெளிப்படுத்தி வருபவராகிய திரு. வ. ஏ. சரவணமுத்து அவர்களால் எழுதி யாழ்ப்பாணம் ஸ்ரீ சண்முகநாதன் புத்தகசாலை அதிகாரிகளால் நன்கு அச்சிட்டு வெளியிடப்பெற்றதாகும். இதன்கண் இலங்கை பிருத்தானிய ஆளுகைக்கு வந்தமை தொடக்கமாகப் போரசின் பாதுகாப்பு ஈறாகப் பதினொரு அதிகாரங்கள் அடங்கியுள்ளன. இலங்கை பிருத்தானியாவுடன் அரசியலில் எவ்வாறு சம்பந்தப்பட்டதென்பதையும், பிருத்தானியா, பிருத்தானிய சக்காரதிபத்திய நாடுகள் என்பவற்றின் அரசியற்பரிபாலனங்கள் எவ்வாறு நடைபெறுகின்றன வென்பதையும் இந்நூல் விசேடமாக எடுத்துக்கூறுவதாகும் குறித்தவகுப்பிற்குத் நூல்உபயோகமாகுமென எண்ணுகின்றோம். பிரதியொன்றன் விலைசதம்75(அணா12)பெறவிரும்புவோர் மேற்படி சண்முகநாதன் புத்தகசாலையிலும் ஏனைய பிரபல புத்தகசாலைகளிலும் பெறலாகும்.

கந்தர்லீலையின்காட்சிமுதலியன

இப்பிரதியின் கண்ணே கந்தர்லீலையின்காட்சி, கந்தர்ஷஷ்டி விரதமகிமை, சோமாஸ்கந்தமூர்த்தியின் பெருமை என்னும் மூன்று விஷயங்கள் அடங்கியுள்ளன. இது அத்தக்குடி ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி பஜனை மடத்தின் வெள்ளிவிழா நிகழ்ச்சியில், திருமந்திரகர், கார்வார், ஸ்ரீ பு. சுப்பையபிள்ளையவர்கள் செய்த தலைமையுரையை ஆதாரமாகக் கொண்டதாகும். இச்சிறிய நூல் படிப்போருள்ளத்தில் முருகக் கடவுள்மீது பத்தியுறச் செய்யும். பாலசுப்பிரமணியப் பெருமான் திருவுருவப்படம் படைவீடுகள்ஆறின் படம்என்பன இந்நூலைத் து மிளிர்கின்றன. பிரதியொன்றன் விலை அணா 10. (சதம் 62) பிரதிகளைப் பெறவிரும்புவோர். கார்வார் ஸ்ரீ. பு. சுப்பையபிள்ளை, இலக்கம் 11, சிவன்கோவில் வடக்கு வீதி, அத்தக்குடி (தென்னிந்தியா) என்னும் விலாசத்திற் பெற்றுக்கொள்ளலாகும்.

எமது பார்வைக்கு அனுப்பப்பட்ட பஞ்சாங்கப் பிரதியின் பொருட்டும் ஏனைய நூற் பிரதிகளின் பொருட்டும் அனுப்பி வைத்தவர்கட்கு மனமுவந்த நன்றி கூறுகின்றோம்.

ஊர்நெல்விலைக் கட்டுப்பாடு

இலங்கையில் விளையும் எவ்வகையான நெல்லும் புசலொன்று 2-50 சதத்திற்கு மேற்பட விற்கவொண்ணாதென இலங்கை உணவுப் பொருட் கட்டுப்பாட்டுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்குத் தபாற் கட்டண அதிகரிப்பு

பெப்ரவரி முதல் திகதியிலிருந்து இந்தியாவுக்குத் தபாற் கட்டணங்கள் பின்வருமாறு உயர்த்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

சாதாரணத் தபால்

கடிதங்களுக்கு முதலாவது ஒரு அவுன்ஸ்வரை 10 சதமும் அதற்குமேல் அதிகப்படியான ஒவ்வொரு அவுன்ஸுக்கும் 5 சத வீதமும் தபாற்கட்டணமும் செலுத்தவேண்டும்

போஸ்ற்காட் ஒவ்வொன்றுக்கும் 5சதம்.

அச்சடித்த பிரசுரங்களுக்கு ஒவ்வொரு 2 அவுன்ஸ் எடைக்கும் 4 சதம்.

விமானத் தபால்

கடிதங்களுக்கு ஒவ்வொரு அரை அவுன்ஸுக்கும் 20 சதம். போஸ்ற்காட் ஒவ்வொன்றுக்கும் 12 சதம்.

ரிஜிஸ்டர் தபால்

சாதாரணத் தபாற்கட்டணத்தோடு ஒவ்வொரு தபாலுக்கும் 20 சதம் வீதம் ரிஜிஸ்டர் கட்டணம்.

மலாயாவிலுள்ள இலங்கையர்

செய்தி அறிய அரசாங்கத்தின் முயற்சி

மலாயாவிலும் தொடுவாய்ப் பகுதியிலுமுள்ள இலங்கையரைப் பற்றி அவ்வப்போது அறிக்கைகள் வெளியிடுவதற்காக அவர்களைப்பற்றிய செய்திகளை அறிந்துகொள்வதற்கு விளம்பரப் பகுதியிலிருந்து முயற்சித்து வருவதாக அறியப்படுகிறது.

யுத்தம் காரணமாக மலாயாவிலிருந்து வெளியேறும் இலங்கையர்களுக்கு வேண்டிய உதவியளிப்பதாக இலங்கை அரசாங்கம் தொடுவாய்ப்பகுதி அரசாங்கத்துக்கு அறிவித்தபொழுது மலாயாவிலிருந்து வெளியேற இலங்கையர் எவரும் மனுச்செய்யவில்லையென்று இலங்கை அரசாங்கத்துக்கு மறுமொழி கிடைத்தது.

மலாயாவில் சகல வகுப்புகளையும் சேர்ந்த இலங்கையர்கள் அநேகர் இருப்பதாகத் தெரிகிறது. அவர்களைப்பற்றிய செய்தி இந்நாட்டில் வெளியிடப்பட்டால், அஃது இந்நாட்டினரால் வரவேற்கப்படுமென்பது நிச்சயமென்று உணரப்படுகிறது.

இந்திய அரசாங்கத்தின் ஏற்பாடு

பல்வேறு யுத்த அரங்கங்களிலும் பிரதானமாக மலாயாவிலும் தூரகிழக்கின் ஏனைய பாகங்களிலும் வசிக்கும் இந்தியர்களைப்பற்றி விசாரித்து அறிவதற்காக இந்திய அரசாங்கத்தின் வெளிநாட்டிலாகா ஒரு விசேஷ கிளை ஸ்தாபனத்தை ஆரம்பித்திருப்பதாகவும் அவ்வாறு கிடைக்கும் சமாசாரங்கள் ஒழுங்காகப் பிரசுரிக்கப்படுகின்றனவென்றும் இந்தச் சந்தர்ப்பத்திற் குறிப்பிடப்படுகிறது.

செஞ்சிலுவைச் சங்கம் போன்ற ஸ்தாபனங்கள் உட்படப் பலவழிகளிலும் சமாசாரத்தையறிவதற்கு இலங்கை அரசாங்கம் முயற்சிக்குமென்று அறியப்படுகிறது.

சனங்களை வெளியேற்ற ஏற்பாடு செய்வது பிரயாணவசதியளிப்பது போன்ற பல சமாசாரங்களும்வெளியிடப்படும்.

கண்டியில் விமான எதிர்ப்புப் பாதுகாப்பு

கண்டி, ஜன, 20—

கண்டியில் இதுவரையில் உத்தியோக முறையில் விமான எதிர்ப்புப் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படாவிட்டாலும் யுத்த நிலைமையையொட்டி முன்னேற்பாடுகள் சில வலுவிற் செய்து வரப்படுகின்றன.

மிஸ்டர். வி. டி. பால்ராஜ் தீயணைக்கும் சேவைக்கு ஆள்திரட்டி வருகிறார். மிஸ்டர். எல். எல். ஹண்டர் வேறு பொதுசனப் பாதுகாப்புச்சேவைக்குத் தொண்டர்களைத் திரட்டிவருகிறார்.

பட்டினசபை மின்சார என்ஜினியர் மிஸ்டர். எச். எப். மோரட்சாம் ஏரியைச்சுற்றி அரைகுறை விளக்கணைப்பைப் பரீக்ஷார்த்தமாக நடத்திவருகிறார். ஏரியைச் சுற்றியுள்ள விளக்குகளின் வெளிச்சம் ஏரிச்சலத்திற் பிரதிபலிக்காமலிருப்பதற்காகவே அரைகுறை விளக்கணைப்பு நடைமுறைக்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறது.

ஆஸ்பத்திரியில் இதுவரை உபயோகிக்கப்படாத இரண்டு வார்டுகளைக் காயமடைந்தவர் சிகிச்சைக்குரிய வார்டுகளாக்கி விடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணம் சைவாசிரிய கலாசாலை-பிரவேசம் 1942

2-ம் வருடப் பயிற்சி

யாழ்ப்பாணம் சைவாசிரியகலாசாலைப்(2-ம்வருடப்பயிற்சி)பிரவேசப்பரீட்சைக்கு விண்ணப்பங்கள் சைவவித்தியா விருத்திச்சங்கப்பாடசாலை மனேஜரால் 1942-ம் ஆ மாசி மீ 15 வரையிலும் ஏற்றுக் கொள்ளப்படும்.

விண்ணப்பம் அனுப்புவோர் London Matric, Cambridge Senior அல்லது S. S. C. (ஆங்கிலம்) பரீட்சைகளொன்றில் தமிழ் ஒரு பாடமாகச் சித்தியடைந்தவராயேனும் அல்லது தமிழ் ஆசிரிய தராதரபத்திர (Tamil Teachers Certificate) பரீட்சையிலேனும் சித்தியடைந்தோராய் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் 1942-ம் ஆ மாசி மாதம் 28-ந் திகதி வித்தியா கந்தோருக்கு அனுப்பப்படவேண்டி யிருப்பதால் 1942-ம் ஆ மாசி மீ 15-ந் திகதிக்குப் பிந்திய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

விண்ணப்பப் பத்திரங்களை வித்தியா கந்தோரிலிருந்து பெற்றுக்கொள்ளவும். எங்களால் சிபார்சு செய்யப்பட்டோரே பிரவேச பரீட்சைக்குத் தெரியப்படுவர்.

General Manager
சைவவித்தியா விருத்திச்சங்கம்
யாழ்ப்பாணம் 12-1-42
Mis 171—19, 22.26.1.42

பாடசாலைகளுக்குத் தீயணைக்கும் படைகள்

ஆசிரியர்களுக்கு விமான எதிர்ப்புப் பாதுகாப்புப் பயிற்சி

பாடசாலைகளின் விமான எதிர்ப்புப் பாதுகாப்புத்திட்டம் சம்பந்தமாகப் பாடசாலைகளில் தீயணைக்கும் படைகள் அமைப்பதின் அவசியம் அதிகாரிகளால் வற்புறுத்தப் படுகிறது.

இப்படைகளின் முதலாவது கடமை நெருப்புக்குண்டுகளை அணைத்தல் அப்புறப்படுத்தல் ஆதியனவேயாகும்.

அதிகாரிகளால் சிபார்சு செய்யப்பட்டபடி விமான எதிர்ப்புப் பாதுகாப்பு வேலைகளைவகுத்து அவற்றை நடத்துவதற்கு ஆசிரியர்களைக் கொண்டு விமான எதிர்ப்புப் பாதுகாப்பு நிர்வாகசபைகள் அமைக்கப்படவேண்டுமென்று ஆலோசனை சொல்லப்படுகிறது.

பாடசாலைகளில் ஆரம்ப சிகிச்சை நிலையங்கள் அமைக்கப்படுவதையும் அதிகாரிகள் ஆதரிக்கின்றனர். இதற்காக ஒரு தனிஅறையை ஒதுக்கி, அதில் தேவையான பொருள்கள் தயாராக வைக்கப்பட்டிருக்க வேண்டுமென்று ஆலோசனை கூறப்படுகிறது.

இப்பொழுது பாடசாலைகளின் வைத்திய அதிகாரி டக்டர், எம். டி. எஸ். ஜயவர்த்தனவும் மற்றுமிரு டக்டர்களும் பாடசாலைகளின் விமான எதிர்ப்புப் பாதுகாப்பு வேலையைக் கவனித்து வருகின்றனர்.

கொழும்பிலுள்ள பெரிய பாடசாலைகளின் தனித்தனிவிமான எதிர்ப்புப் பாதுகாப்புப்பயிற்சி நிலையங்கள் இருக்கின்றன. அவைகளைக்காட்டிலும் கொழும்பிலுள்ள ஆங்கிலப் பாடசாலைகளுக்காக மற்றும் 14 பயிற்சி நிலையங்கள் இருக்கின்றன. சிங்களப் பாடசாலை ஆசிரியர்களுக்கு ஒன்பது நிலையங்களிலும் தமிழ்ப்பாடசாலைகளைச் சேர்ந்தவர்களுக்கு மூன்று நிலையங்களிலும் பயிற்சியளிக்கப்படுகிறது

ஏறக்குறைய 150 பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் இந்நிலையங்களில் நடைபெறும் சொற்பொழிவுகள் ஒத்திகை முதலியனவற்றைக் கேட்கவும் பார்க்கவும் வருகின்றனர்.

ஒவ்வோரு ஆசிரியரையும் சாத்தியப்பட்டவரை ஆரம்ப சிகிச்சையில் திறமைசாலியாக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்தேவைக்குப்போதிய சிப்பந்திகள் பாடசாலைகளின் வைத்திய சுகாதார அதிகாரிக்குக் கிடைக்க முடியாதிருப்பதால் வைத்திய அதிகாரிகள் காலைநேரங்களில் சாத்தியப்பட்ட அளவு சொற்பொழிவுகள் நிகழ்த்துவதற்குப் பாடசாலைகள் ஏற்பாடு செய்யவேண்டுமென்று ஆலோசனை கூறப்படுகிறது.

ஜெனறல் வேவலுக்கு ஆஸ்திரேலியாவின் உதவி

லண்டன், ஜன 22

சமீபத்தில் மத்திய கிழக்குப் பகுதியிலிருந்து திரும்பிய நான்கு ஆஸ்திரேலிய இராணுவ அதிகாரிகள் தென் மேற்குப் பசிபிக் பகுதியைச் சேர்ந்த நேசதேச ஐக்கியப் படைகளின் பிரதம தளகர்த்தர் ஜெனறல் ஸேர், ஆர்ச்சிபோல்ட் வேவலின் இராணுவ சிப்பந்திகளாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர். ஜெனறல் வேவலின் தூண்டுதலின் பேரில் குறித்த நியமனங்கள் செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

ஆறுவாரத்தில்ஒருபாஷை.

காஷ்மீர் சமஸ்தானத்தைச் சேர்ந்த ஜம்மு நகரிலுள்ள பிரின்ஸ் ஒவ் உவேல்ஸ் கல்லூரியில சமஸ்கிருத-பாஷாசிற்பத்திப் போதாசிரியரும், இந்திய பாஷாசிற்பத்திச் சங்கத் தலைவருமாகிய டக்டர் சித்தேஷ்வர் வர்மா அவர்கள் சப்தத்தைக் கொண்டு புதுமாதிரியான அரிவரி எழுத்துக்களைக் கண்டுபிடித்திருக்கிறாராம். இந்த எழுத்துக்களைக் கொண்டு சாதாரண புத்தி சாதுரியமுள்ள ஒருவர் ஆறுவாரத்துள் எந்தப் பாஷையையும் படித்துக் கொள்ள முடியுமென்று அவர் கூறுகின்றார். சமீபத்திலே இவர் அராபிய பாஷையில் ஓர் சொற்பொழிவு ஆற்றினர். தாம கண்டு பிடித்த புதிய அரிவரி எழுத்துகளின் உதவியோடு அப்பாஷையைத் தாம் படித்ததாக கூறினர். இப் புதிய முறையைக் கொண்டு தாம் நாற்பது பாஷைகளைப் படித்திருப்பதாக அவர் பாராட்டிக் கொள்கின்றார்.

கடிதம்

இந்துசாதனப் பத்திரிகாசிரியர்
அவாகட்கு, வண்ணார்பண்ணை.

ஐயா,

19-1-42ல் கூடிய எமது நிருவாகசபைக் கூட்டத்தில் தீர்மானித்த பிரேரணைகளையும் கூட்ட நடவடிக்கைகளையும் தங்கள் பத்திரிகையிற் பிரசுரிக்குமாறு வேண்டிக்கொள்ளுகிறேன்.

உபதலைவர் திரு ஜே. ஜ. விரசிங்கம் தலைமையில் எமதுகாரியாலயத்தில் கூட்டம் மாலை 6 மணியளவில் கூடியது.

பட்டினசங்கத்தலைவர் திரு ஆர். சிவகுருநாதர், பட்டினசங்க அங்கத்தவர்கள் சாது எஸ். எம். அபூபக்கர், டாக்குத்தர் வீ. எஸ். இராமநாதன்,செவாலியர் எஸ். அருணாசலமும் எமது நிருவாகசபை அங்கத்தவர் 112பேரில் 89பேரும்சமுகமளித்தனர்.

பட்டினசங்கக் கூட்டத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறிய சம்பவங்களைப் பற்றி விளக்கும்படி பட்டினசபைத் தலைச்சபையினர் கேட்டதனால், அவர் ஆதியோடந்தமாக விஷயத்தை எடுத்துக் காட்டினர். தாம் கூட்டத்தில் பங்குபற்றி வெற்றிபெற்றுள்ள அது முறைமையற்றதென்று எண்ணுதால் தாம் கூட்டத்தைவிட்டு வெளியேறினதாகவும் சொன்னர். சபையினர் அதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு இதனுடன் அனைக்கப்பட்டிருக்கும் தீர்மானங்களை நிறைவேற்றினர். அத் தீர்மானங்களையும் தங்கள் பிரசுரத்தல் வெளியிடுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,
ச. நடராசா,
கௌரவ காரியதரிசி.

1942ம்ஆண்டு ஜனவரி மாசம் 19ந் திகதி திங்கட்கிழமை மாலை 6 மணியளவில் யாழ்ப்பாணப் பட்டின வரியிறுப்போர் சங்க நிர்வாகசபைக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்ட பிரேரணைகள் பின்வருமாறு:-

1. 16-1-42ல் நடந்தேறிய பட்டின சங்க மாதாந்தக் கூட்டத்தின் பட்டின சங்கத் தலைவர் திரு. இ. சிவகுருநாதர் அவர்கள்மீது நம்பிக்கையில்லையென நிறைவேற்றிய தீர்மானத்தை இச்சங்கம் பலமாகக் கண்டிக்கிறது.

"திரு. இ. சிவகுருநாதர் அவர்கள் மீது இச்சங்கத்தினரதும் பட்டின வரியிறுப்போரில் பெருந்தொகையினருக்கும் பரிபூரணமான நம்பிக்கை இருக்கிறதென்பதை மிகச் சந்தோஷமாய் இச்சங்கம் தெரிவித்துக்கொள்கிறது."

"ஆதலின் பட்டினசங்கத்தில் ஒரு கட்சியினருடைய தீய சூழ்ச்சியால் ஒரு அங்கத்தவருடைய அதிக வாக்கினால் நிறைவேற்றப்பட்ட மேற்படி தீர்மானத்தைப் பொருட்படுத்தாது சட்டப்படி அவருக்கு ஏற்பட்டுள்ள காலம் வரை பட்டின சங்கத் தலைவராக இருந்து தாம் செய்து வரும் அரிய சேவையைச் செய்யவேண்டுமென்று திரு. சிவகுருநாதர் அவர்களை இச்சங்கம் விண்ணப்பிக்கிறது.

2. திரு. க. ஐயாத்துரையவர்கள் இச்சங்கத்துக்கு மாறுன அங்கத்தவர்களோடு சேர்ந்து தலைவர்மீது கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றிவரியிறுப்போருக்கும் மற்று முன்னோர்க்கும் மாறாக விளைத்த செயலை இச்சங்கம் மிகுந்த மனவருத்தங்கொண்டு கடிந்து கண்டிக்கிறது.

மேலும் அவரால் வகைச்சாத்திடப்பெற்ற வரியிறுப்போர் சங்க நிபந்தனைகளுக்கமைய உடனேயே பட்டினசங்க அங்கத்தவர் பதவியைத் துறக்கவேண்டுமென்று இச்சங்கம் மனவருத்தத்துடன் அவரைப் பலமாய் வற்புறுத்துகின்றது.

மேலும் இச்சங்கம் அவரின் செயலை விட்டு மனப்பூர்வமாக மனவருந்த 22-1-42 வியாழக்கிழமை மாலை 6மணிக்குள் வரியிறுப்போர் சங்கத்துக்கு, "எதிர்க் கட்சி அங்கத்தவர்கள் நால்வருடனும் சேர்ந்து பட்டினசங்கத் தலைவர்மீது கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றியது தவறென ஒப்புக்கொண்டு அத்தலைவர் மீது தமக்கு நம்பிக்கையுண்டென வெளிப்படுத்தி இனிமேல் வரியிறுப்போர் சங்கத்தோடு 100 வீதமும் ஒத்துழைப்பேன் என்று தெரியப்படுத்தாவாரேயாகில் மேற்குறித்த பிரேரணை வலியையற்றுப் போகுமெனத் தீர்மானிக்கிறது.

3. வரியிறுப்போர் சங்கத்தின் சார்பாக சென்ற மற்றைய அங்கத்தவர்களின் பெருந்தன்மையையும் ஒத்துழைப்பையும் இச்சங்கம் மிகவும் பாராட்டுகின்றது.

4. 1ம் 4ம் வட்டார அங்கத்தவர்கள் செய்யும் செயல்களும் உபாயங்களும் பொது நன்மைக்கு முற்றும் மாறுனதென்று பட்டினசங்கக் கூட்டங்களில இவர்கள் கையாளும் செயல்கள் வெறுக்கத் தக்கனவென்றும் இச்சங்கம் இருவட்டாரத்தினரதும் வட்டார வாக்காளர்கட்குத் தெரிவித்து அவ்வங்கத்தினர்களுடைய செயல்களைக் கண்டிக்கிறது.

"மேலும் சுயதவ ஆட்சி மந்திரிசபையால் நியமனம் பெற்ற அங்கத்தவர்கள் இருவரும் பட்டினவாசிகளின் நன்மைக்கு உழைக்கவில்லையென்றும் அவர்கள் பட்டினசங்கக் கூட்டங்களில் பேசத்தகாத வார்த்தைகளைப் பேசி 1ம் 4ம் வட்டார சுயவ அங்கத்தவர்களுடன் சேர்ந்து நடந்துகொள்வதை இச்சங்கம் பலமாகக் கண்டிப்பதுடன் இத்தன்மைய அங்கத்தவர்களை நியமித்ததால் [illegible] யாழ்ப்பாண வாசிகளுக்குப் பெருந் தீங்கு விளைத்திருக்கிறார் என்பதையும் இச்சங்கம் தாழ்மையுடன் [illegible] மந்திரியாரின் நிர்வாகசபைக்கும் மேன்மை தங்கிய தேசாதிபதிக்கும் தெரிவிக்கின்றது.

5. தேசப் பாதுகாப்பில் அரசினருடன் என்றும் இச்சங்கம் மனப்பூர்வமாய் ஒத்துழைக்க ஆயத்தமாய் இருக்கிறதென்பதை இச்சங்கம் தீர்மானிக்கின்றது.

6. அரிசிக் 'கூப்பன்'களையுடையோர் ஒவ்வொருவரும் தங்கள் வசதிக்கேற்ப விரும்பிய கடைகளில் கொடுத்து அரிசியைப் பெற்றுக்கொள்ளக்கூடிய அநுமதியை அளிக்க வேண்டுமென்றும் தங்கள் தங்கள் இயல்பிற்கேற்ப ஒருநாளுக்கோ அன்றி ஒருநாளுக்கு மேற்படவோ வேண்டிய அரிசியைக் கட்டுப்பாட்டுக்கமைய வாங்கலாமெனவும் அநுமதித்து ஏழை மக்கட்கு வசதி செய்ய வேண்டுமென்றும் இச்சங்கம் அரசினரைக் கேட்டுக்கொள்ளுகின்றது.

7. தெருக்கூட்டும், மலமெடுக்கும் பட்டினசங்கத் தொழிலாளர்களது நலவுரிமைகளைப் பாதுகாப்பதற்கென மூன்று ஒ பறைசாற்றும் ஒருவர் தாம் நிறுவியுள்ள தொழிலாளர் சபையைப் பட்டினசபை கண்ணியப்படுத்தவேண்டுமென்று கேட்பதை அச்சபை அங்கீகரித்தல் பட்டினத்திற்குத் தீங்கை வருவிக்குமென்றும் இடையிடையே தோன்றித் தொழிலாளர் சிலரை ஏமாற்றித் தங்கள் சுயநல நோக்கத்துடன் மாத்திரம் கிளர்ச்சியை யுண்டுபண்ணிச் சமாதானமின்மையை உண்டாக்கும் பொறுப்பற்ற நிலைவரையும் அவர்தம் சங்கத்தையும் எவ்விதத்திலும் கௌரவித்தலால் பிற்காலத்தில் ஒன்றன்பின் ஒன்றாய்ப் பேராபத்துக்கள் இப்பட்டினத்தில் ஏற்படுமென்றும் ஏழை மக்களாகிய அத் தொழிலாளரது நலனை வேண்டி உழைப்பது அவர்க்கு கருத்தல்லவென்றும் அக் கருத்துடையாரின் தொழிலாளர் சங்கம் தாபித்துச் சில வாரங்கட்குள் வேறு [illegible] செய்யாது வேலை நிறுத்தம் உண்டாக்குவதிலேயே கண்ணும் கருத்துமாய் இருக்கிறாரென்றும் வரியிறுப்போர் சங்கம் நன்கறிந்து பேரளவில் மாத்திரமுள்ள தொழிற்சங்கத்தையும் இப்பட்டினத்தில் ஒருவித உரிமையும் இல்லாதவரும் தலைவரெனத் [illegible] தையும் குழப்பத்தையும் உண்டுபண்ணுவதில் அதிக பிரியமுள்ளவருமான பேர்வழித் தலைவரையும் ஒருசிறிதும் அங்கீகரியாது வேலை நிறுத்தம் நியாயமின்றி ஏற்படுவதனுல் வரும் வசதியீனங்களைச் சமாளிக்கவேண்டிய முன்னேற்பாடுகளைச் செய்துகொண்டும் பயமுறுத்துவோருக்கு இடங்கொடுத்தல் ஆகாதென இச்சங்கம் பட்டினசங்கத் தலைவரையும் அங்கத்தவர்களையும்கேட்டுக்கொள்கிறது.

பட்டின சபைக் கூட்டம்

'கோரமின்றிக்' கலைந்தது

23-1-42

யாழ்ப்பாணம் பட்டின சபைத் தலைவர் மிஸ்டர். R சிவகுருநாதர் மீது நம்பிக்கை யில்லாத் தீர்மானம் அச்சபையின் கூடிய தொகையினரால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர், இன்று தான் முதற் கூட்டம் கூடப்படுவதாக அறிவிக்கப்பட்டது. இக்கூட்டத்தின் நடபடிக்கை எப்படியிருக்குமென்று ஊரவர்கள் எதிர்பார்த்திருந்தனர். இதற்கு முன்னும் பின்னும் பட்டினசபையிலுள்ள பிளவு காரணமாகப் பல நிச்சயமில்லாக் கதைகள் பரவத் தொடங்கின.

இன்று நகரசபை மண்டபத்திற்குத் தலைவர் மிஸ்டர். R. சிவகுருநாதர், மிஸ்டர். C. அருளானந்தம், மிஸ்டர். M. சின்னத்துரை, மிஸ்டர். V. S. இராமநாதன் முதலானோர் கூட்டம் கூடப்பட வேண்டிய நேரத்திற்கு வந்திருந்தனர். பின்னர்ச் சிறிது நேரத்தின் பின்னுல் மிஸ்டர். S. M. அபூபக்கர் வந்தார். மற்றைய அங்கத்தவர்கள் கூட்டத்திற்கு வரவில்லை. தலைவர் மிஸ்டர் R. சிவகுருநாதர் மற்றைய அங்கத்தவர்களை ஒருசமயம் வரக் கூடுமென நம்பி, கால்மணிநேரம் வந்த அங்கத்தவர்களோடு மண்டபத்திற் காத்திருந்தார். மற்றையோர் வராமையால் தலைவர் சென்ற கூட்டத்தில் ஆலோசனைக்கென விருந்த அதிப்ரதானமான விஷயங்களை ஆலோசனைக் கெடுக்காமல் வேறுசில பிரதான மற்ற விஷயங்களை ஆலோசனைக் கெடுத்த பின்னர்க் கூட்டம் ஏன் கலைய வேண்டும் என மேலும் இன்று இரண்டு பிரதான விஷயங்கள் ஆலோசனைக்குக் குறிப்பிடப்பட்டவை யென்றும் அவற்றுள் ஒன்று பட்டினத்தின் சுகாதாரம் சம்பந்தமான தென்றும், மற்றது வரியிறுப்போரின் உயிரும் உறுப்பும் போன்றுள்ள தென்றும் கூறித் தாம் இன்று கூட்டத்தைக் "கோரம்" இல்லாமையால் கூட முடியாதிருப்பது பற்றி வருத்தப்படுவதாகவும் கூறினர். பின்னர், அங்கு வந்திருந்த அங்கத்தவர்களைத் தம்முடைய கந்தோர் அறைக்கு வரும்படியும் தாம் அவர்களோடு சில விஷயங்களைக் கலந்தாலோசிக்க விரும்புவதாகவும் கூறி, அவர்களை வேண்டிக் கொண்டார்.

ந-ி

தோட்டத் துரைமார் படையின் அடுத்த பிரிவு

54 பேர் விரைவில் இந்தியாவுக்குச் செல்வர்

54 பேர்களடங்கிய இலங்கைத் தோட்டத்துரைமார் துப்பாக்கிப் படையின் மற்றொரு பிரிவு இந்தியாவில் பெல்காமிலுள்ள இராணுவ அதிகாரிகள் பயிற்சிப் பாடசாலையிற் சேருவதற்காகக் கூடிய சீக்கிரத்தில் இலங்கையை விட்டுப் புறப்படும்.

குறித்த பிரிவுக்கு லெப்டினண்ட் ஜே. டி. ஜீ. கிரீன் தலைவராகவிருப்பார். பிரபல கிரிக்கட் கோல்ப் ஹாக்கி முதலிய விளையாட்டு வீரர்கள் பலரும் குறித்த படையிற் சேர்ந்திருக்கின்றனர்.

விவாகம்

இராமநாதன் — சிவகாமியம்மாள்

ஈயனுர்கோவிலடியைச் சேர்ந்த டக்டர் S. துரையப்பா அவர்களதும் அவர் பாரியாரதும் புதல்வியாகிய திருவளர் செல்வி **சிவகாமி அம்மாளுக்கும்**, முதலியார் R. கந்தையா அவர்களதும் அவர் பாரியாரதும் புதல்வரும் அநுராதபுரக் கச்சேரியிற் கடமை பார்ப்பவருமாகிய திருவளர் செல்வன் **K. இராமநாதன்** அவர்களுக்கும் நிகழும் 1942-ஆ ஜனவரி மாதம் **28**-ந் திகதி **புதன்கிழமையன்று** இரவு **9** மணியளவில் வரும் சுபமுகூர்த்தத்தில் மணமகளில்லத்தில் விவாகம் நடைபெறும்.

மணமகளில்லத்தில் இம்மாதம் **30**-ந் திகதி **வெள்ளிக்கிழமை** கொண்டாட்டம் நடைபெறும்.

நண்பர்களும் சுற்றத்தவர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். தனி அழைப்புப்பத்திரங்கள் இல்லை. **ஆசனம் கர்பனம்.**

Mis. 173 26.1.42

ஏழைக் கிராமவாசிகளுக்குக் குடியேற்ற வசதி?

போக்குவரத்துமந்திரியின் ஆலோசனை

குருணாக்கலைடிஸ்திரிக்கில் ஹிரிப்பிட்டியாவில் உள்ள ஒரு தென்னந்தோட்டத்தை அரசாங்கத்தார் வாங்கி ஹிரிப்பிட்டியாவிலும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் வசிக்கும் ஏழைக் கிராம வாசிகளுக்குக் குறித்த தோட்டத்தில் குடியேற்ற வசதியளிக்க வேண்டுமென்று விவசாய மந்திரி மிஸ்டர். டி. எஸ். சேனநாயகாவுக்குப் போக்குவரத்து மந்திரி மிஸ்டர். ஜே. எல். கொத்தலாவலை ஆலோசனை கூறியிருப்பதாகத் தெரிகிறது.

இத்தோட்டம் 2,500 ஏக்கருக்கு அதிகமான விஸ்தீரணமுள்ளது. குடியேற்றத்துக்கு இவ்விடம் மிகவும் ஏற்றதாயிருக்கிறதென்று கூறப்படுகிறது.

வடமேல் மாகாணத் தலைவர் மிஸ்டர். என். இ. [illegible] இவ்விஷயத்தில் கலந்தாலோசிக்கப்பட்டிருக்கிறார்.

ஹிரிப்பிட்டியாவில் இப்பொழுதுள்ள ஜனநெருக்கத்தைக் குறித்த திட்டம் குறைத்து விடுமென்று எதிர்பார்க்கப் படுகிறது.

சொந்த வாசஸ்தலமில்லாத 100க்கு மேற்பட்ட சனங்கள் தாங்கள் குடியேறுவதற்காக நிலம் கோரியிருப்பதாகத் தெரிகிறது. இவர்களிற் பெரும்பாலோருக்கு மேட்டுப் பூமியில் வீடுகட்டுவதற்கான வெளிநிலம் கிட்டாதாயினும் குறித்த தென்னந் தோட்டத்திற் கருகே சொந்த நெல்வயல்கள் இருக்கின்றன.

ஹிரிப்பிட்டியாவுக்கு மிகவும் சமீபத்திலேயே கணவத்தைப் புகையிரத நிலையம் இருப்பதால் மேற்கூறிய தோட்டத்தில் மக்கள் குடியேறினுல் அதற்குப் புகைரத வசதிகளும் கிடைக்க மார்க்கமிருக்கிறது.

ஆசிரியர்களும் உணவுப் பொருள் விருத்தியும்

விமானப்படைத் தாக்குதலினின்றும் பாதுகாப்புக்கள்

சென்ற வெள்ளிக்கிழமை மாலை யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகளின் தலைமையாசிரியர்கள் கூட்டம் நடைபெற்றது. மாகாணத் தலைவர் மிஸ்டர் எம். பிரசாத் உட்படப் பல ஆடவரும்மகளிரும் கூட்டத்திற்குச் சமுகமளித்திருந்தனர். அவ்வமயம் மிஸ்டர் எல். மக். டி. [illegible] பேசும்போது பின்வருமாறு கூறினர்:-

"உள்நாட்டு உணவுப் பொருள்களை விருத்தி செய்தல், விமானப் படைத் தாக்குதற் பாதுகாப்புப் பயிற்சி, பிரசாரம் ஆகிய மூன்று காரியங்களில், பாடசாலைகள் அரசாங்கத்தோடு ஒத்துழைக்க வேண்டும்.

உணவுப்பொருள் விருத்தியைப் பற்றிக் குறிப்பிடும்போது, மிஸ்டர் [illegible], அரிசி, சீனி, மிளகாய் கருவாடு முதலிய இலங்கையின் சாதாரண உணவுப்பொருள் இறக்குமதியின் புள்ளிவிபரங்களைத் தெரிவித்து, ஜப்பான்,சயாம், மலாய் நாடு ஆகியவை மூலமாக வந்து கொண்டிருப்பதால், இவ்வுணவுப் பொருள் வருகை பாரதூரமாகப் பாதிக்கப்படுதல் கூடுமென்றும், ஆதலால், ஒவ்வொரு துண்டுக் காணியும் பயிரிடப்படுதல் வேண்டுமென்றும் குறிப்பிட்டார். மேலும் ஆசிரியர்கள் பூமிசாஸ்திரம் படிப்பித்தலில் அதிக சிரத்தை எடுத்துக் கொள்வார்களாக என்றும் குறிப்பிட்டார். யாழ்ப்பாணப் பாடசாலைகளில் கிராமதிட்டம் தோல்வியுற்றமைக்குக் காரணம் பெற்றோரேயாவரென்றும், அவர்கள் பள்ளிக்கூடங்களின் கடமை புத்தகங்களிலிருந்து படிப்பிப்பதும் பரீக்ஷைகளில் மாணவர்களைச் சித்தியெய்தச் செய்வதுமே ஆகுமென்றும் கருதுகின்றனர் என்றும், சில பெற்றோர்கள் தம்குழந்தைகளைத் தாம்படிக்க அனுப்பியதன்றிக் கமஞ் செய்யப் பழக அனுப்பவில்லையென்று கூடக் கூறத் தாம் கேட்டதாகவும், அந்த மனப்பான்மை மாறவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

மேலும் அவர்பேசியதாவது:-

"விமானத் தாக்குதற் பாதுகாப்பு வார்டன் சேவைக்குத் தேவையான சட்டங்களை அமைத்துக் கொள்ளக்கூடியவிதமாக இருத்தல் வேண்டும். பகைவனும் தன் தாக்குதலின் முறைகளை அடிக்கடி மாற்றிக்கொள்ளுவான். ஆதலால் குறித்த சில சட்டங்களை மாத்திரமே கையாள வேண்டுமென்று கொள்வது பயனற்றது.

குண்டுகளில் உடனே வெடிக்கும் குண்டுகள் உண்டு; காலந்தாழ்த்தி வெடிக்கும் குண்டுகள் உண்டு; இரண்டு வகையான தன்மையும் பொருந்தின குண்டுகளும் உண்டு. ஆனல் குண்டுகள் நிலத்தில் விழுந்த பின்னன்றி அவை எப்பிரிவைச் சேர்ந்தவையென்று கண்டுபிடிக்க முடியாது.

ஆகாயவிமானச் சத்தம் கேட்டதும், வெளியிலே ஓடுதல் அபாயமானது; அப்படி வெளியிலே ஓடமுயற்சித்த மாணவர் இங்குள்ள பாடசாலையொன்றில் தண்டிக்கப்பட்டமை பாராட்டத் தக்கது. பினங்கின் வீழ்ச்சிக்கு இக்குணமே பெரிதும் காரணமாகும். அங்கு இரண்டுநாட்களாக ஆகாயவிமானங்கள் உலாவின. சனங்கள் அவைகளைப் பார்ப்பதற்காகத் தெருக்களிற் குழுமினர். 3-ம் நாளிற் குண்டுகள் சொரியப்பட்டன. எவருடைய விமானமாயிருந்தாலும் சரிதான், விமானங்கள் உலாவும்போது எல்லோரும் வீட்டுக்குளிருத்தல் வேண்டும்.

அபாயச்சூழல் ஊதப்படும்போது எல்லோரும் என்ன செய்து கொள்ள வேண்டும் என்பதைப் பயின்று கொள்ளுதல் வேண்டும். எல்லோரும் நிலத்திற் பதிந்து படுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

கிராமங்களில் வீண் வதந்திகள் பரவாமல் காப்பாற்றுவதில் ஆசிரியர்கள் பெரும் பங்கு எடுத்துக் கொள்ளவேண்டும்.

இவ்விஷயங்களில் ஏதாவது அறியவிரும்பின், கொழும்புத் துறைமுகத்திலுள்ள கத்தோலிக்க பள்ளிக்கூடத்திற் போய் அறிந்து கொள்ளலாம், அங்கு நல்ல வேலை நடைபெறுகின்றது.

இக்கூட்டத்திற்குச் சமுகமளித்துள்ளவர்களின் தொகையே மாகாணத் தலைவர்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சியில் ஆசிரியர்கள் போதிய ஒத்துழைப்போடு நடந்து கொள்ளுகிறார்களென்பதைக் காட்டுகின்றது."

பிருத்தானிய இயந்திர சாதனப் பீரங்கிப் படைபவனி

நகரில் நடைபெற்ற இராணுவக் காட்சி

சென்ற புதன்கிழமை காலை கொழும்பு வீதிகளில் பிருத்தானிய இயந்திர சாதனப் பீரங்கிப்படை பவனி சென்றது. நகரில் இதுவரை என்றுமே நடைபெற்றிராத இந்த இராணுவக் காட்சியைப் பார்ப்பதற்குத் தெருவெல்லாம் ஜனங்கள் திரள் திரளாகக் குழுமியிருந்தனர்.

இந்தப் பீரங்கிப் படையின் ஊர்வலத்திற்கு முன்னுல் மோட்டார் சயிக்கிள் கோஷ்டி யொன்று மணியொன்றுக்கு 20 மைல் வேகத்தில் ஊர்வலப் பாதையை முழுவதிலும் வழி விலக்கிக் கொண்டு சென்றது.

இந்த ஊர்வலத்தில் ஏராளமான இராணுவ வாகனங்கள் கலந்து கொண்டன. அவற்றில் வைக்கப்பட்டிருந்த பல்வேறு ரகமான பீரங்கிகள் வெளியில் தெரியாதபடி ஒருவித வலையினுல் மறைக்கப்பட்டிருந்தன. மற்றும் பல வாகனங்களில் தேடிபோக் கருவிகள் இருந்தன. கடைசியாகப் பீரங்கி வண்டிகளும் வேறு சில இயந்திர சாதனங்களுஞ் சென்றன. காரியாலய அதிகாரிகள் ஓர் இடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு மோட்டாரிற் சென்று பீரங்கிப்படையின் பவனியைப் பார்வையிட்டனர். ஊர்வலத்தை இறுதியிற் கோல்பேஸ் மைதானத்திற் பீரங்கிப்படை ஒத்திகை யொன்று நடைபெற்றது. கொழும்பிலுள்ள துருப்புக்களின் சேனுதிபதி அந்த ஒத்திகையைப் பார்வையிட்டார்.

ஆரம்பத்திற் திட்டஞ் செய்யப்பட்டிருந்த ஊர்வலப் பாதையிற் சிறிது மாற்றம் ஏற்பட்டது. யோர்க் வீதியிலிருந்து ஊர்வலம் சதாம் வீதிக்குத் திரும்பி இராணி வீதியில் நுழைந்தது. பின்னர் செயின்வீதி வழியாகக் கடற்கரை ரோட்டுக்குச் சென்றது. இதனுல், பொது ஜனங்கள் ஊர்வலத்தை நன்கு பார்க்க முடிந்தது.

பின்னர்ப் பீரங்கிப்படை ஆதிருப்பள்ளித் தெரு வழியாகச் சென்று மருதானை, கறுவாக்காடு ஆகிய இடங்களைச் சுற்றிக்கொண்டு புல்லர்ஸ் ரோட்டில் இறங்கிக் காலி ரோட்டை அடைந்தது.

கோல்பேஸ் மைதானத்தில் இலங்கைப் பாதுகாப்புப் படை அதிகாரிகள் அநேகர் உட்படத் திரளான சனங்கள் குழுமியிருந்தனர். பீரங்கிப்படை கோல்பேஸ் மைதானத்தை யடைந்து ஒத்திகையை ஆரம்பித்ததும் அங்கு கூடியிருந்த சனங்கள் மிகுந்த உற்சாகமடைந்தனர்.

இங்கு ஏறக்குறையக் கால்மணி நேரம் ஒத்திகை நடைபெற்றது. ஒத்திகை துரிதமாகவும் ஒழுங்காகவும் நடைபெற்றதென்பது குறிப்பிடத் தக்கது.

இந்தமாதிரியான இராணுவக் காட்சி இதற்கு முன்னர் இலங்கையில் நடைபெற்றதே யில்லை. இதைப் பார்த்தவர்கள் நவீன இராணுவம் நடமாட்டம் எத்தகைய தென்பதை ஓரளவு தெரிந்து கொள்ள முடியும்.

ஊர்வலம் தங்குதடை யின்றிச் செல்வதற் கேதுவாகப் பாதை நீளம் வாகனங்களாவது சனங்களாவது குறுக்கிடாமல் இருப்பதற் கேதுவான ஏற்பாடுகளைப் பொலிஸார் செய்திருந்தனர். சிலபகுதிகளில் இராணுவ வாகனங்கள் அதிக வேகமாகச் சென்ற போதிலும் அசம்பாவிதமான காரியங்கள் எதுவும் நடைபெறவில்லை.

இராணுவம் நடைபெறும் பொழுது நகரிலுள்ளவர்கள் வீதிகளிற் செல்லாமல் அவற்றை வெளியாக விட்டுவிட வேண்டிய அவசியத்தைக் கொழும்பிலுள்ள துருப்புகளின் சேனுபதி மீளவும் ஒரு முறை வற்புறுத்தினுர்.

முன்னெச்சரிக்கை செய்யப்பட்டிருக்கும் வேடிக்கை பார்ப்போர் பலர் வீதிகளில் நடமாடிக் கொண்டிருந்தன ரென்றும் அவர் குறிப்பிட்டார்.

உணவுப் பொருள்களின் கூடுதலான விலை

நிர்ணயிக்கப் பட்டுள்ள விபரம்

கொழும்புப் பட்டினசபை எல்லைக்குள் சில்லறை வியாபாரத்திற்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள கூடுதலான விலைகளைக் கீழே காண்க:-

இந்திய உருளைக் கிழங்கு றாத்தல் ஒன்றுக்கு 12 சதம்.

மிளகாய் றாத்தல் ஒன்றுக்கு 30 சதம்.

சிவப்பு வெங்காயம் றாத்தல் ஒன்றுக்கு 7சதம்.

சித்திரச் சொக்கர் திருமுகப் பாசுரம்

— தொடர்ச்சி

பருவகாலத்து மழை பெருகிப் பெய்வதைப் போலத் தனக்குரிமைத் தானம் அளிப்பதே. அவருரிமை எப்பது என எண்ணி இன்பமுடன் இபவன் என்பதும், பாணனுர் பரிசில் பெறுதற்கு ஏற்ற பாத்திரம், யாழ் வல்லவர், என்னன்பர் என்பதும் வழிப்படுத்தி பதுப்பின்ற யானெ சிறப்புடையவன், உன்னையும் ஆளாக வுடையவன் என்ற தோன்ற "சிவன் யான் மொழிதரு மாற்றம்" என்பதும் நீ அலன் தருநிபற்றத் திறை பொருளாகத் தருதலேயன்றி இன்முகம் இன்னுரை சேர்த் கண்டு கலந்தளவளாவிக் களித்துக் கொடுத்தல் முதலியனவாக நீதி நூல்களிற் கூறப் பெற்ற மாட்சிகளும் நிறைந்த பொருளாக அளித்தல் வேண்டும் என்பதும் முதலிய பயங்கள் தோன்ற அடியேம் மனத்தும் ஆக அருளிச் செய்திருத்தல காண்க.

சுருக்கக் கூறின் கொடுப்போன் கருத்தையும் கொள்வோன் கருத்தையும் அறிந்து ஒருபாயத்தானே இருவரும் பயனடையச் செய்விக்கும் சொக்கலிங்கப்பெருமான் சித்திரத்தை விளக்கும் எடுத்துக்காட்டு "கருத்தறிந்து முடிப்பான்" என்ற தேவாரப்பகுதியாகும்.

இதனையே "சித்திரச் சொக்கன் தந்த திருமுகம் கொணர்ந்தேன்" என்று பாணனுர் வாயிலாகக் கூறுவிக்கின்ருர் பெரும்பற்றப் புலியூர் நம்பி.

அடியேனுளங் கவர்ந்த அத்தகைய அரும்பாடல்,

மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவு பானிற வரிச்சிற
கன்னம் பயில்பொழி லால வாயின்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப்படியெனப் பாவலர்க்கு
உரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா வுகைக்கும் சேரலன் காண்க,
பண்பால் யாழ்பயில் பாணபத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பாற்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.

திருச்சிற்றம்பலம்.
—ஞானசம்பந்தம்.

இந்தியத் துருப்புகளின் திறமை

கீழ்க்காணும் கடிதம் தேசாதிபதியிடமிருந்து இலங்கைப்படைகளின் சேனதிபதியான மேஜர் ஜெனரல் ஆர். டி. இன்ஸ்கிப்பிற்குக் கிடைத்திருக்கிறது:-

இன்றுகாலை (ஜனவரி மீ 19-ந் திகதி) நடைபெற்ற இந்தியத் துருப்புகளின் பவனியில் பங்குபற்றிக் கொண்டிருந்த துருப்புகள் அதிகாரிகள் ஆகியோரின் திறமையையும் கம்பீரத் தோற்றத்தையும் நான் மெச்சுவதாகக் கொழும்பிலுள்ள துருப்புகளின் சேனதிபதிக்கும் அவர் மூலமாக மேற்படி பவனியிற் கலந்து கொண்டவர்களுக்கும் அறிவிப்பீர்களாயின் நான் மிகவும் நன்றியுடையவனாக இருப்பேன்.

துருப்புகள் பவனிசெல்லும்போது அவற்றின் வணக்கத்தை ஏற்றுக் கொள்ளும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது மிகுந்த மகிழ்ச்சியை உண்டு பண்ணுகின்றது. பொது ஜனங்கள் வீதிகளில் வரிசையாகக் கூடி நின்றமை இந்நாட்டுமக்கள் இந்தியாவிலிருந்து வந்துள்ள துருப்புகளை வரவேற்பதில் என்னுடன் சேர்ந்திருக்கின்றனரென்பதைக் காட்டுகின்றது.

அவர்களுக்கும் எமக்குமிடையே ஏற்கனவே பரம்பரம் சிநேகபாவமும் நம்பிக்கையும் ஸ்தாபிதமாகி விட்டது. இப்பொழுது பலவகையில் ஆரம்பித்திருக்கும் நட்பானது எதிர்காலத்தில் இரு சாதேரையும் பிணைத்து வைக்கும்.

ஆறுமுகநாவலர் பதிப்புப் புத்தகங்கள்

ஆறுமுகநாவலரவர்கள் பதிப்பு நூல்களை இலங்கையில் விற்பனை செய்வதற்கு வே. கந்தசாமி என்பவரைச் "சோல் ஏஜன்ற்" ஆக நியமித்திருக்கிறோம். மேற்குறித்த வியாபார ஸ்தலம் இந்துசாதன ஆபிசிற்கு முன்னுள்ளது. இன்று தொடக்கி நாவலரவர்கள் பதிப்பு நூல்களுக்குரிய ஓடர்களை இந்தியாவுக்கனுப்பாது கீழ்க்காணும் விலாசமுள்ள புத்தகசாலைக்கே அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.
விலாசம்:-
V. Kandasamy
Jaffna Tamil Book Depot
VANNARPONNAI.
Q 134 17. 11 .41 16. 2. 42

தி மலாயன் டிரேடிங் கொம்பனி
(சிங்கப்பூர்க் கொம்பனி)
இரும்பு, பித்தளைச்சாமான்கள், சீமேந்துவகைகள் விற்பனவு செய்வோர் பெரியகடை, யாழ்ப்பாணம்.
"புரொப்ரைட்டர்" K. A. இரத்தினசிங்கம்
Y 19. 4.3.41—3.3.42

மெலிந்து சோர்வுற்று பலமிழந்து ஊக்கமற்று இருக்கும் சகலருக்கும் ஓர் விசேஷச் செய்தி

ஜீவாதார உலோக சத்துக்களடங்கிய இந்தச்சிறந்த சாதனம் உங்களுக்குப்புதிய ஆரோக்கியமும் ஊக்கமும் பலமும் அளிக்கும்

பழனி சி. எம். சாமி அசல் தங்கபஸ்பத்தை இன்று முதலே சாப்பிட்டு வாருங்கள். உஷ்ணம், மேகம், கடுப்பு, மூலம், நீர்சுழிவு, வாதம், தொய்வு, க்ஷயம், குன்மம் இவைபோன்ற ஏனைய எல்லா நோய்களும் நீங்கிவிடும். கண்டிப்பாகப் பலனடைவீர்கள். தேகம் பூராவும் புது ரத்தம் பாயும். பசி ருசியுண்டாகும். நரம்புகள் வலுவடையும். கண்கள் பிரகாசமடையும். நீங்கள் வாலிப பலமும் தேக திடகாத்திரமும் அடைவீர்கள்.
24 நாள் பஸ்பம் விலை ரூபா 10
தலைமை ஆபீஸ்:- மலையப்பசாமி வைத்தியசாலை பழனி S I
கிளை ஆபீஸ்:- மலையப்பசாமி வைத்தியசாலை வண்ணார்பண்ணை கதிரேசன் கோவிலடி யாழ்ப்பாணம்
Y221 31-3.41—30.3.42

யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி
1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,36700
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங் கட்டுமுறை
மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.
தினசரிப் பற்றுவரவு
எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் 9ரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.
தவணை வரையறுக்கப்பட்ட ,க்ஷேமப்பணம்
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம் 8 விகிதமாகக் கொடுக்கப்படும்
உண்டியல்கள்.
கொழும்பிலுள்ள "காஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொலைவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாய்ப்பமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.
கடன்.
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்
S. கனகசபை
சிருப்பர்.
Y164 A. 21-11-41—20-11-42 (தி)

வடமாகாண
ஆசிரியர் சகாயநிதிச் சங்கம்
1933-ம் ஆண்டு தொடக்கப் பெற்றது
அரசினரால் பதிவு செய்யப்பட்டது
அங்கத்தவர்கட்டணப்பணம் மாத்திரம் 45000 ரூபாவிற்குமேலிருக்கிறது
30 வயதுக்குட்பட்ட ஒவ்வொரு ஆசிரியரும் அங்கத்தினராய்ச் சேரலாம். மாதக்கட்டண விகிதம்:-
1-ம் வகுப்பு ரூ. 4-00 2-ம் வகுப்பு ரூ. 2-00
3-ம் வகுப்பு ரூ 1-00
தேவையான விபரம் எம்மிடம் அறிந்து கொள்ளலாம்
ச. பொ. இராசையா
காரியதரிசி,
வடமாகாண ஆசிரியர்சகாயநிதிச்சங்கம்
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
வண்ணார்பண்ணை
H 145 1-12-41—31-5 42

600 வருஷப் பழமை வாய்ந்தது

பெரிய வைத்தியர் ஒருவரின் ஏட்டிலிருந்து காணப்பட்ட பழைய வைத்திய முறையின்படி புத்தகுரு ஒருவரால் ஒரு மலைக்கோவிலில் இப்போது தயாரிக்கப்படும் 'நேத்திர ரத்தின தைல'முறை 600 வருஷப் பழமை வாய்ந்தது.

"நேத்திர ரத்தின தைலம்" பலநோய்களை மாற்றவல்ல புகழ்பெற்ற எண்ணெயாகும்.

நேத்திர ரத்தின தைலம் நோய்களை மாற்றப் பெயர் பெற்ற மருந்தெண்ணெய்
இந்தத் தைலத்தை ஒழுங்காகப் பாவித்து வந்தால் கண்குத்து, நீர்வடிதல் கண்சிவப்பு, கண்வலி, ஜலதோஷம் நரம்புவலி, தலைவலி முதலிய நேத்திரத்துக்கும் தலைக்கும் சம்பந்தமான எல்லா வியாதிகளும் சொஸ்தமாகும். கண்பார்வை குன்றியவர்களுக்கும் சமீபபார்வை, தூரப்பார்வை யற்றவர்களுக்கும் இத்தைலம் ஓர் அருஞ் சஞ்சீவியாகும். இது மூளைக்குக் குளிர்ச்சி யளித்துக் கண்நோய்கள் உண்டாகா வண்ணம் தடுக்கும்.

குறிப்பு: இந்த எண்ணெய் மயிர் வளருவதற்கு உத்தரவாதமுடையது.

விலை ரூபா. 2/50
ஏஜெண்டுகள்:- எஸ் மால்ஜீ அமிஜீ
பெரியகடை, யாழ்ப்பாணம்.
Q 115 23.10.41-22-1-42

மாபெருந்தலைவனின் செயலும் மனிதவாழ்வும்

(ஆசிரியர் சி. சுப்பிரமணியம் மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை)

"உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவர் அன்னவர்க் கேசர ணாங்களே"

எல்லா வுலகங்களையும் படைத்தலும் காத்தலும் அழித்தலும் ஆகிய மூன்றையும் நீங்காத முடிவில்லாத திருவிளையாட்டுக்களை உடையவராகிய அவரே இவ்வுலகங்கட் கெல்லாம் தலைவரான கடவுளாவர். அப்படிப்பட்ட கடவுட்கே சரண்கள் அடைக்கலம். "அகர முதலவெழுத்தெல்லா மாதி பகவன் முதற்றே யுலகு" என்றபடி எழுத்துக்களெல்லாம் அகாரமாகிய முதலையுடையன, அதுபோல உலகம் ஆதிபகவனாகிய முதலையுடைத்து. இத்தகைய சர்வவல்லபங்களையும் தாங்கியுள்ள அந்தத் தேவன் சகல சீவராசிகட்கும் பொதுவானவரே. உலகில் துக்கங்கள் பல இருப்பதை நாம் காண்கிறோம். ஒரு வீட்டார் அழுது கொண்டிருக்கின்றனர், மற்றொரு வீட்டில் மகிழ்ச்சி நிலவுகின்றது. ஒருவருக்குத் துன்பமும் ஒருவருக்கு இன்பமும் அளிப்பதைக் குறித்துக் கடவுளைப் பண் பிழைத்தவர் என்றுங்கூட ஒருசிலர் கூறியுள்ளனர். இத்தகைய நீதியான தலைவர் நிலவுலகின் கண்ணே சிலரைச் செல்வராகவும், சிலரை வறியராகவும் சிலரை நோயாளிகளாயும் சிலரைச் சந்தேகமுடையராயும் இப்படிப் பலதிறப்படப் படைத்திருப்பதின் காரணம் தான் என்னே! அதுதான கர்மம். மனிதன் தான் செய்து கொண்ட பாப புண்ணியங்கட்குத் தகவே பிறவி பெடுக்கின்றன். இந்த உண்மையைத் தான் புத்தர் கண்டுபிடித்து உலகோர்க்குப் போதித்தார். இந்தக் கர்ம நியாயத்தையே இந்த இருபதாம் நூற்றாண்டில் சுவாமி விவேகானந்தர் சகலருக்கும் விளக்கினர். கர்மம் உண்டா இல்லையா என ஆராயப் புகுவது சூரியனில் ஒளியுண்டோ இல்லையோ என ஆராய்வதைப் போலாகும். இந்த சமயப் புராணங்களும் பெரியோரின் சரிதங்களும் எங்கள் வாழ்க்கையின் அனுபவமும் கர்மாவைப்பற்றிய கருத்தை உள்ளங்கை நெல்லிக் கனிபோல தெள்ளிதின் புலப்படுத்தும். "தக்க முற்பவத்தில் ஆன்ற தருமம் சங்கியற்றினேர்கள் ஒக்கவிப்பவத்தில் இன்பம ஒருங்கனுபவிப்பர், இன்றேல் மிக்கவெந் துயரத் தாழ்வர்." "தோன்றிய சீவரெல்லாம், இப்புவி யிடத்துச் சாலத் துவண்ணுவர்; எண்ணியாங்கே எப்படி முறறும்? முற்று செம்பிரான் ஒருவற் கன்றி-அப்படி முற்றின், கீழ்ச்மலாம் பகுப்பிரண் டுண்டாமோ?" சுந்தரமூர்த்திநாயனர் சிவபக்தனாகவிருந்து தொண்டாற்றிவருங் காலத்தே ஓர் பெண்ணில் மோகங்கொண்ட பிழைக்காக பூவுலகில் பிறவியெடுக்கும்படி தேவன் விதிக்கின்றர். ஆகவே இருவரும் வெவ்வேறு குடும்பங்களில் பிறந்து தக்க காலத்தே ஒருவரையொருவர் விவாகம் செய்து கொண்டார்கள். இவர்களின் பிறப்பும் விவாகமும் வாழ்க்கையும் விதியின்படியே நடக்கின்றது. தாரம் தலைவிதிப்படியே யாகும் என்பதையும் இவர் சரிதையால் நாங்கள் அறியக்கிடக்கின்றது. கடல்போன்ற விரிந்து பரந்த ஆழமான அறிவாளியாயெவரும் சிறந்த நூலாசிரியருமாகிய 'மில்றன்' (Milton) தாம் எழுதிய ஆங்கில நூலகளில் எல்லாம் தேவகற்பனையை உலகினர்க்கு நன்கு உணர்த்தியுள்ளார். தேவன் மனிதர்க்குச் செய்வதெல்லாம் நீதியானவை என்று தாம் இயற்றிய "மோட்ச வீழ்ச்சி" (Paradise Lost) என்னும் நூலில் ஸ்தாபிக்கின்றர். ஆதாமும் ஏவாளும் இன்பகரமாகப் பரிமளம பொருந்திய பூங்காவிலே வாழ்ந்து வருகின்ற காலத்தே தேவனால் விலக்கப்பட்ட ஓர் மரத்தின் கனியைப் புசித்த குற்றத்திற்காக வாழ்வில் துன்பத்தை யடைகின்றனர். பிறவித்துயர் இவர்களைப் பிடிக்கின்றது. ஆகவே இந்த உலகமாகிய நாடகசாலையில் தோன்றிய சீவரெல்லாம் தாம் தாம் முன் செய்து கொண்ட கர்மத்தின்படி தேவனால் விதிக்கப்பட்ட பிரகாரம் நடிக்க வேண்டியவர்களே. இந்த உண்மையை அறியாது நாம் மயங்குகின்றேம்.

கர்மத்தை வெல்லச் சிறந்தவழி கடவுள் பக்தியே. "சாகமானது கோடி கூடி நின்றலும் ஒருகல்லெதிர் முன் எதிர் நிற்குமோ, கர்மமானது கோடி முன்னே செய்தாலும் உன் கருணைப்பிரவாக வருளாந் தாகமாய் காடின அவ வாதிக்கவல்லதோ" என்று தாயுமான சுவாமிகள் கூறுகின்றர். தவஞ் செய்த சூரன், இராவணன் முதலியோர் பெரும் செல்வத்தையும் அதிகாரங்களையும் பெற்றார்கள், மார்க்கண்டேயர் தேவாராதனையால் மரணத்தை வெற்றி கொண்டார். ஒருவன் ஸ்ரீமத் நாராயணனை நினைந்து தவஞ் செய்து இராசபோகங்களையும்மோட்சத்தையும் பெற்றுன். நித்திய தரித்திரத்திலாழ்ந்த குசேலர் கடவுள் பக்தியால் சகல ஐஸ்வரியங்களையும் மோட்சத்தையும் பெற்றர். அவனன்றி ஓர் அணுவும் அசையாது. ஆகவே கஷ்டங்களை நீக்குவதற்குச் சிறந்த வழி அந்த இறைவனை இறுகப் பிடித்தலே. கடவுளை நம்பினேர் கைவிடப்படார். பிரகலாதனன் கடவுளை நம்பி அவர் மீது பக்தி கொண்டிருந்தபடியாலல்லவோ தன் பிதாவாகிய இரணியனின் கொடுமைகளிலும் சூழ்ச்சிகளிலும் இருந்து தப்பித்து வெற்றி கொண்டான். தெய்வப்புலவர் திருவள்ளுவர் பிறந்தபொழுது தாய் இக்குழந்தையை ஆதரிப்பார் யார் என மனம் வருந்தியபோது அக் குழந்தை தன்னைப் படைத்த கடவுள் இருக்கின்றர் தன்னை ஆதரிக்க என்று கடவுளையே நம்பி இருந்தது.

"எவ்வுயிரும் காக்கவொரு
வீசனுண்டோ இல்லையோ
அவ்வுயிரிலயானுெருவனல்லவோ
—வவ்வி
பருதுவது கொண்டிங்
கலையதே னன்னே
வருகுவது தானே வரும்."

இங்ஙனம் பாடி இறைவனிலேயே தன்னைப் பொறுப்புக் கொடுத்து இலுப்பையின்கீழ்க் கிடந்த குழந்தையை ஓர் வேளாளன் எடுத்து வளர்த்தான்.

இவ்வாறே இவரின் சகோதரி ஔவைப் பிராட்டியாரும் பிறந்தவுடன் தன் பூர்வஞானத்தினால் பின் வரும் பாட்டைப்பாடித் தன்னை அந்த இறைவனிடமே ஒப்படைக்கின்றர்.

"இட்டமுடன் என்தலையில்
இன்னபடி என்றெழுதி
விட்டசிவனும்செத்துவிட்டானே
—முட்ட முட்டப்
பஞ்சமே யானாலும்
பாரமவனுக் கன்றே
நெஞ்சமே யஞ்சாதே நீ."

இந்த ஈஸ்வரபக்தியே இவர்களை உலகம் போற்றும் உத்தமர்களாகவும் சிறந்த ஞானிகளாகவும் விளங்கச் செய்தது. சிவாஜி மன்னனின் தாயாரின் கடவுள் பக்தியே சிவாஜியை மகமதியருடன் போர் செய்து வெற்றி கொள்ளவும் இந்துக்களின் இராச்சியத்தைத் திரும்பப் பெறவும் காரணமாய் இருந்தது. கருப்பைக்குள் முட்டைக்கும் கல்லினுட் டேரைக்கும் விருப்புற அமுதளிக்கும் மெய்யன் தன்னை நம்பினேரைக் கைவிடுவாரா? பறக்கின்ற பறவைகளுக்கும் கானத்திடையுறைகின்ற விலங்குகளுக்கும் சேமவைப்புண்டோ? வருவாய் உண்டோ? எந்த இடத்தேனும் போய் இன்றிரப்பது தானுமுண்டோ! நாளைக்கென்செய்வோமெனும் கவலை இவர்களுக்குண்டோ? இந்த உயிர்களுள் உணவில்லாமல் இறந்ததுண்டோ? இத்தகையவை இவர்களைக் காப்பாற்றுவது இறைவனேயல்லாமல் வேறு யாருமுண்டோ? ஆனால் மனிதர் இந்தப் பிரபஞ்சமாயையில் அகப்பட்டு அறியாமை மிகுதியால் வறுமை வந்தபோது பொறாமை, பொய், களவு முதலான துன்மார்க்கங்களில் சென்று மீட்சியில்லாப் பாவங்களைத் தேடிக் கொள்கின்றனர்; செல்வம் வந்தபோது மமதை கொண்டு தெய்வத்தையும் மறந்து அதிக்கிரமத்திற்கு ஆளாகின்றனர். --வரும்

விளம்பர விகிதம்

முதன்முறைக்கு
ஒருகலம் ரூபா 10-00 அரைக்கலம் ரூபா 6-00
கால்கலம் ரூபா 4-00 ஒரு அங்குலம் ரூபா 1-00
அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி
காலம் குறித்த விளம்பரங்கள் விசேஷ விளம்பரங்கள் [illegible]

பத்திரக்கிரயம்

வருஷம் ஒன்றுக்கு யாழ்ப்பாணப்பட்டினசபை எல்லைக்குள்
தமிழ் ரூபா 5-00 இங்கிலிஷ் தமிழும் 9-00
இலங்கை இந்தியா 6-00 இங்கிலிஷ் தமிழும் 12-00
தொலைதேசப் பகுதி 9-00 இங்கிலிஷ் தமிழும் 13-00
தனிப்பிரதி சதம் 5
முற்பணமாக அனுப்பப்படல் வேண்டும்

குறைந்தவிலை! குறைந்தவிலை!!
தற்போது
இலங்கை இந்தியா முழுவதும் பெயர்பெற்ற
* பவுண் மார்க் ஓடுகள் *
திறமான "பவுண்மார்க்" ஓடுகள்
தற்சமையம் யாழ்ப்பாணம் ரேகில் வரவிருப்பதால் ஏறக்குறைய ஒருவாரம்வரையில் மேற்படி ரேகில்
சகாயமான விலைக்குப்
பெற்றுக் கொள்ளலாம்
தேவையானவர்கள் முந்தியே ஆடர் அனுப்ப வேண்டியது
சி.வீரகத்திப்பிள்ளை அன் ஸ்சன்ஸ்
[Phone No 93] யாழ்ப்பாணம்
Y 164—

திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(✝ இசைத்தட்டு)

(396 மீ)

செவ்வாய் ஜனவரி 27

காலை 7-30 ஆரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 ஜி. கிருஷ்ணமூர்த்தி வீணை 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 திரைகானம் ✝ 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 இசை விருந்து ✝ 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 35 எஸ். பாலகிருஷ்ணன் பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 ஜி. கிருஷ்ணமூர்த்தி வீணை 5-45 இசைப் பயிற்சி 6.00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 6-30 வானொலி வாத்திய கோஷ்டி 7-15 நாமும் யுத்தமும் 7-30 அறிவிப்புகள் 7-45 தமிழில் செய்திகள் 8-00 மதராஸிலுள்ளபடி மன்னார்குடி ராஜகோபால் பிள்ளை பாட்டு 9-15 எம். எஸ். சுப்புலக்ஷ்மி ✝ 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 இடைவேளை ✝ 9-55 நாஜி பிரசாரம் பி. பி. ஸி. அஞ்சல் 10-00 ஒலிபரப்பு முடிவு.

புதன் ஜனவரி 28

காலை 7-30 ஆரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 வி. கே. ராகவமேனன் பாட்டு 8-15 ஆங்கிலத்தில்செய்திகள் 8-25 துதிப் பாட்டுகள் ✝ 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 திரைகானம் ✝ 1-30 வி. கே. ராகவமேனன் பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 கல்விஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 எச். இராமச்சந்திர சாஸ்திரி புல்லாங்குழல் 5-45 மொஹரம் பேச்சு 5-55 நாத் ✝ 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 6-30 எச். ராமச்சந்திர சாஸ்திரி புல்லாங்குழல் 7-15 நடைமுதல் நிகழ்ச்சி 7-30 அறிவிப்புகள் 7-45 தமிழில் செய்திகள் 8 00 சர்வகலாசாலைகளுக்கு (ஆங்கிலப் பேச்சு) 8-15 'யார் போய்ச் சொல்வார் எனக்கானபேர்' இசை நிகழ்ச்சி 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 இடைவேளை ✝ 9-55 நாஜி பிரசாரம் பி. பி. ஸி. அஞ்சல் 10-00 ஒலிபரப்பு முடிவு.

வியாழன் ஜனவரி 29

காலை 7-30 ஆரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 டி. கே. கோவிந்தராஜுலு நாயுடு புல்லாங்குழல் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 திரைகானம் ✝ 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 பழைய கானங்கள் ✝ 1-30 டி. கே. கோவிந்தராஜுலு நாயுடு புல்லாங்குழல் 2 00 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 குமாரி காமாக்ஷி, குமாரி விஜயலக்ஷ்மி பாட்டு 5 45 இசைப் பயிற்சி 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 கிராம நிகழ்ச்சிகள் 6-30 குமாரி காமாக்ஷி, விஜயலக்ஷ்மி பாட்டு 7-15 செய்தி விளக்கம் 7-30 அறிவிப்புகள் 7-45 தமிழில் செய்திகள் 8 00 சாத்தூர் எஸ். கிருஷ்ண ஐயங்கார் பாட்டு மதுரைகாபுரி கோபால கிருஷ்ணஐயர் வயலின் ராமநாதபுரம் முருகபூபதி மிருதங்கம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 இடைவேளை ✝ 9-55 நாஜி பிரசாரம் பி. பி. ஸி. அஞ்சல் 10.00 ஒலிபரப்பு முடிவு.

விசேஷ விளம்பரம்

இந்தியா, இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்சு, முதலிய, தேசங்களின் பிரதான ரேகைசாஸ்திர நூல்களின் பிரமாணங்களைக் கொண்டு உங்கள் கைரேகையிலிருந்து எல்லா விதமான பலன்களையும் சொல்லக்கூடும்.

ஸ்புடம் தசவர்க்கம் முதலிய கணித வகைகளும் மகாதெசை புத்தி பலனும் அடங்கிய ஜாதகம் ரூபா 5 ஷை விஷயங்களுடன் கோசர பலன் காலசக்கரபலன், பாவபலன், முதலியன அடங்கிய பெரிய ஜாதகம் எழுத ரூபா 10/—
போக்கத்தை, நா. சின்னத்துரை
கைதடி வடக்கு, கைதடி.
Y 67 20-7.41—19-7.42

வாதம், சலரோகம், குன்மம், முதலிய
எந்த
வியாதியானாலும்
உத்திரவாதத்துடன்
குணப்படுத்தப்படும்
சுகாதார மாஜி மந்திரி கனம்
Dr. T. S. S. ராஜன்
ஸ்ரீ. S. சத்தியமூர்த்தி M. L. A.
Dr C.சபாபதி, M. B. C. M. M. R. C. S. L R C P.
முதலிய பலரால் புகழ்ந்து நற்சாட்சிப்பத்திரம் அளிக்கப்பட்டன.
நேரில் அல்லது தபால்மூலமாய்ச் சிகிச்சை பெறவும்.
Dr. K. S. Paripurnananda
Regd. MEDICAL Practitioner
R K. S. Vaidyasala
Palaly Rd. Kandarmadam
JAFFNA
Q 129 6-11-41—5-2-42

N. வைத்திலிங்கம் & கம்பெனி
பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்.
கட்டிடங்களுக்கு வேண்டிய முதல்தரமான சாமான்கள்
ஜெர்மனி, ஜப்பான், டச்சு
முதலிய இடங்களில் செய்யப்பட்ட உத்தரவாதமுள்ள சீமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள் வர்ணங்கள், வார்ணிஸ், கொழுக்கி ஓடுகள் இன்னும் கட்டிடத்திற்குரிய சகலசாமான்களும் எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.
கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால் சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.
HEAD OFFICE
38, 3rd Cross Street,
Colombo.
Telephone No. 30.
(Y 20— 1-4-41—31-3-42) தி

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai Jaffna, at their Press, the Saiva PrakasaPress Vannarponnai, Jaffna, on Monday January 26th 1942.